வும். மத்த தண்ணீரில் மந்த மருந்துகளையுங் குடிக்கவும். நாயுருவி இலையும், மிளகு
அரைத்து கொடுக்கவும். பா

பாண்டுவுக்கு:- ஈளை இருமல் சோகைக்கு:-

இலைக் கள்ளி வடக்கு வேர் கொண்டு வந்து நிழலில் உலர்த்திப் பொடி செய்து
கருவி பழம் விராகனெடை.க, இந்தப் பொடி வெருகடிப் பிரமாணம் வெள்ளாட்டுப்
பாலுடன் மைத்து முழுங்கத் தீரும். பூறனை பூசத்து நாள் பிறண்டை கொண்டு வந்து
சிறுக சிறுக நறுக்கி சிறல் விரையும் சிறுக நறுக்கி இரண்டு சம பாகமாக கூட்டி உலத்
திப் பொடி செய்து வெருகடிப் பிரமாணம் நெய்யில் மைத்து முழுங்க ஈளை இருமலெல்
லாந் தீரும்.

சோகை இருமல் பாண்டு ரோகத்துக்கு மருந்து :-

கம்பரிசி பொரி மாவும், நீர்ப்பூலா யிலையும் உலத்திக் கருக்கிப் பொடி செய்து இரண்டுங் கலந்து வெல்லத்துடன் தின்னத் தீரும். ? கழுதை நொள வேர் கழுஞ்சு பால் வார்த்தரைத்து முலைப் பாலில் கொடுக்கவும். தேத்தான் பழத்தை நிழலில் உலத்தி பொடி செய்து எண்ணையுடன் கொள்ள யீளை இருமல் தீரும். இப்பொடி நெய்யில் நக்கி பாண்டுவு ரோகந் தீரும். இப்பொடி மஞ்சளுடன் குடிக்க மூலந் தீரும். இப்பொடி புளிச்ச மோருடன் குடிக்க பெரு வயறு தீரும். இப்பொடி கோமூத்திரத்தில் கொள்ள பேய் தீரும். இப்பொடி பசுவின் பாலுடன் கொள்ள பேய் தீரும். இப்பொடி எண்ணையுடன் குடிக்க கண்ணோவு தீரும். இப்பொடி பசுவின் பாலில் கொள்ள வெளுப்புத் தீரும். இப்பொடி வெள்ளுள்ளியில் முழுங்க வெள்ளோக்காளந் தீரும். இப்பொடி நெய்யி லரைத்துக் கண்ணிலிட கண்ணில் பூவும் போம். இப்பொடி பாலில் கொள்ள திமிரி புழு விழும். இப்பொடி நாறத்தாளிப் பொடியும் சிறு தேக்கு வேரும் அரைச்சு உருண்டை பண்ணி நிழலிலுலத்தி சிறு காலமே ஒரு உருண்டை முழுங்கவும். ஒரு உருண்டை மேல் பூசவும். உடம்பில் உண்டான வியாதி யெல்லாந் தீரும். இப்பொடி கோமூத்திரத்தில் கொள்ள யது ஒட்டமுந் தீரும். இப்பொடி மூக்கில் நசியம் பண்ண தலையிலுள்ள வியாதியெல்லாந் தீரும். ~~ஆரோக்கிய நமஸ்து.~~

கெந்தக பிரயோகம் :-

வயறூதிசல் வயிறு வலி உன்மத்துக்கு.- நெல்லிக்காய் கெந்தகம் பலம்.உய, கொண்டு வந்து அகலப் பானையில் போட்டு பிட்டிட்டாப் போல் வைத்து சட்டி மூடி சீலை மண் செய்து நாழிகை எரிக்க. அதில் ஒழுகி கட்டியாய் விழும். அந்தக் கட்டி எடுத்து கத்தாழஞ் சாறு ஒரு சட்டியில் வாங்கி அந்தப் படி ~~அதின்~~ அதின் மேலும் வைத்து சீலை மண் செய்து நாழிகை எரிக்கவும். அதுவும் உருகிக் கட்டியாய் விழும். அத்தொடுத்து மறுபடி பசுவின் நெய்யில் மண்ட மிட்டெடுத்துக் கொண்டு வலிக்கு இஞ்சி சாத்தில் கொடுக்க. சத்தி உன்மத்துக்கு வாய்வு வூற தேனில் கொடுக்கவும். ஊது காமாலைக்கு தும்பைச் சாத்தில் கொடுக்கவும். உள் மூலம் பிறமூலத்துக்கு குப்பை மேனிச் சாத்தில் கொடுக்கவும். மாந்தைக்குப் பசுவின் நெய்யில் கொடுக்க. குளிர் காச்சலுக்கு பொன்னாங்கண்ணிச் சாத்தில் கொடுக்க. மகோதரத்துக்கு சாட்டறணை சாத்தில் கொடுக்கவும். சகல எலி கடிக்கு இளநீர்க்காய்.ய, உடும்பு பிடித்து தலை வால் குடல் அறுத்தெறிஞ்சு போட்டு எலும்பு உத்திப் போட்டு சதையைக் காய வைத்து சூரணம் பண்ணி இளநீரில் மூன்று நாள் குடிக்க. சகல எலி கடியுந் தீரும். பத்தியம் உப்பு, புளி தவிர்க்கவும். ~~ஆரோக்கிய நமஸ்து.~~

~~(   ) ஏடுகள் இல்லை.~~

60, 61, 62 ஏடுகளில்லை

இருமலுக்கெல்லாம் மருந்து :-

ஒரு வெள்ளைச் சீலையை பிரும்பாலில் நனைத்து நிழலிலுலத்திப் பிறகு குப்பை மேனிச் சாத்தில் நனைத்து நிழலிலுலத்தி அத்திப் பழுப்புச் சாத்தில் நனைத்துலத்தி 4 நாள் புகைப் போர்க்காங்கில் கட்டி வைத்து பிறகு நரிக் காரம் ஒரு பணவெடை பொடி செய்து குப்பை மேனிச் சாத்தில் குழைத்து அந்த சீலையிலொட்டி மூனுருக கிழித்து திரியாக சுரும்டி எந்த குழலிலும் திரியை சொருகி சுட்டுப் புகை பிடிக்கவும்.

அயக்கு முந்திரி நெல்லரிசிச் சோத்துத் தண்ணீரை நிறையக் குடித்துப் பிறகு பிடிக்கவும். இந்தப் படி ங. நாள் ங திரியும் பிடிக்கவும். எட்டு நாள் பத்தியங் கார்க்கவும்.

பேய் தெரிய:-

ஆலவேரும், கோரோசினையும் அரைத்து மாலை நேரத்தில் கண்ணிலிட்டு பார்க்கவும் பேய் தெரியும்.

பைத்தியத்துக்கு மருந்து:-

கை கால் எரியும். மீறல் குலை யெரியும். கையுங் காலு மசந்து போம். அசன மிறங்காது. சரீர மூலந்து போம். தலை சுத்தி வருமிதற்கு அசனத்தின் பேரில் கொடுக்கும் மருந்து:-

சாட்டரணை வேர். க, சுக்கு விராகனெடை. உ, தண்டுகீரை வேர் விராகனெடை. உ, ஒரு தி படி தண்ணீரில் காய்ச்சி ராத்திரிக்கு அசனம் பண்ணின பிறகு ஒரு சாமம் சென்ற பிறகு குடிக்கவும். விடிஞ்ச பிறகு முள்ளங்கியிலை தண்ணி விடாமல் துவைத்து சட்டி காய வைத்து அரைப்படி சிறு ச நாள் குடிக்க. இதுக்கு பத்தியம் பாலு, நெய், தண்டுகீரை கூட்டவும். உப்பு, புளி தவிர்க்கவும்.

விக்கலுக்கு:- கை கால் முடங்கின வாதத்துக்கு மருந்து:-

பிசங் கொட்டை பிலைச் சாறு, பசுவின் பால் சமன் எடை கூட்டிக் குடிக்கவும். ~~பிடிப்பு*விடும்**ங**நாள்*குடிக்கவும்**பத்தியம்*உப்பு~~ விக்கல் வாங்கும். கை கால் முடங்கின வாதத்துக்கு கரிசலாங் கண்ணி சாறு அதில் பாதி நல்லெண்ணை கூட்டிக் குடிக்கவும். பிடிப்பு விடும். ங நாள் குடிக்கவும். பத்தியம் உப்பு, புளி தவிர்க்கவும். வெட்பாலம் பட்டை எள்ளு, பனைவெல்லம் மூன்றும் இடிச்சு முள்ளிக் காயளவு கொள்ளப் பிடிப்பு விடும். உப்பு, புளி தவிர்க்கவும்.

மாவுலிங்கப் பட்டை அரைச்சு பசுவின் பாலில் ங நாள் கொள்ளவும். உப்பு, புளி, கைப்பு தவிர்க்கவும். புங்கங் கொழுந்து எள்ளு, பனைவெல்லம் மூன்றும் பிடிச்சு மூன்று நாள் கொள்ளவும். உப்பு, புளி புகை தவிர்க்கவும்.

அநகன் முலையில் வெப்பு அமந்து தானங் கொதிக்குமாகில் ஏந்தோ ராடிக் காத்தில் எரிய கொப்பொர வேர்வு மூத்தி நின்ற நாடி உதரியெங் கோடியைப் போலே தொந்த நடி என்றுந் துடித்திடுந் துடிப்பனமாதே.

விடாத சுரத்தின் குணம்:-

மெத்தக் கொதிக்கும். மிகக் குளிரும். மிகவே முகமும் வேர்த்து வரும். சித்தங் கலங்கி சத்து சத்து உறக்கம தாம். தலையை நடுக்கும். மயக்கந் தாம். உத்துப் பார்க்க விடா சுரம் போதுமுது மொரு புறங்காய்ந்து வரும். சித்தங் கலங்கித் தாக மதாம். கவிஉத சுர மிகத்தானே.

இதுக்கு மருந்து:-

கருப்பங் கட்டியும், சந்தனமும் கழற் கொடிப் பருப்பும், வெப்பாலை முருக்கிலையும், நன்னாரி முப்படி கருங் கொள்வீராய், தெப்பு பிறந்த சுரங்களெல்லாம் நீராய் குளிருங் கண்டீரே.

காமாலை குணம்:-

முகம் வீங்கும். கண் களத்து முட்ட விரலும் வெளுத்திருக்கும். அகமுந் துடித்து

தடித்து நாவறண்டு, நீர் அறுகுந் தாறும் கெட்டியிருக்கும். மிகவு மசனஞ் செல்லாது. மேனி வறண்டு வெளுத்திருக்கும். நேசமே சொன்னோம் காமாலை செய்யுங் குணங்களிவை கண்டாயே. யிருமலு மிளைப்பு நெஞ்சில் யிடிப்பது மிகவு முண்டாம். பெருகிட நடக்கு மெத்த முருட்டகு மெய்யதாகம். இதக்குப் பத்தியம் பாலு நெய் தண்டுகீரை கூட்டவும். உப்பு, புளி தவிர்க்கவும்.

கெற்ப_சூலையின்குணம்:-

வேறு வேறு கிற கிறத்து மேனியும் வெளுப்பதாகில் பெருகிய பித்த பாண்டு யென்னவே பேசுங் காலை கெற்ப சூலையின் குணம்:- இரண்டு கீழ் வயறும் பத்தி சிக்கென பித்தம் விழுந்து பிறண்டு தான் வைலிற் குசுமாகில் பொல்லாத கெற்பஞ் சூலை வறண்டு மேல் வியாதியாகில் மயக்கிட வருமையாகில் பிறண்டு தான் வலிய தாகும் மருந்தென புகழுவீரே. செங்கழுநீர் யிருப்புச் சிட்டம் பொடிய தாக்கி சித்தாவி கடுக்காயும் ஓமங் கூட்டி பங்கமுடன் நொச்சிலை சாறு வார்த்து பருத்தரைத்துத் தேங்காய் பாலு டனே கொள்ள அங்க முடன் வயிறு தன்னி லெடுத்த நோவு அதில் பிறந்த விப்புருதி ஆமை சூலம் மங்கையர்க்கு எடுத் தோரைத்த தாறு ~~[illegible]~~ மாமி மைந்தனுண்டா வாறு மிந்த மருந்து தானே.

ஆடா தோடை இலை ரசத்தில் அமுகு மிளகுந் திப்பிலியும் கோடா சுக்கு மிக வசம்பு கூட்டி அரைத்து உருண்டை பண்ணி வாடா வயிறு தான் வதங்கு வத்த விருமல் தான் போகும் கோடா சோகை கவிசையிதோ குறிப்பானை (முடிவு சரியாக இல்லை)

சொன்ன_மெகோடா_சோகை:-

சாட்டருணை சாதங் கடர்ந்த கன் மடவீர் காலத்தாலே குளிந்திருந்து பாதங் கூவி சாட்டறனை வேர் பச்சை தின்னவல்லீராய் சீதங் காசஞ் சலதோஷம் சிலந்தி சூல மிவையுடனே வர்தங் காதம் போய் விடும். மத்த பிணியுஞ் சேராதே.

துத்தம் நாரி, துலங்கிய மாஞ் செவி, அத்தனரிட ரதமொடு கூட்டி பச்சை கொண்டு பதினேறு புட்மிட ஒத்தைநரி உலகிரைந்தாகுமே:

கை கால் குளிருந். தலை வலிக்கும், கண்ணு வெள்ளோக்காள முண்டாம். மெய்தா வெதுப்பு தாகமதா மிகவு முண்டாகும். பொய்யா விதனங் குத்திருமல் பொருநஜஞ் அரிக்குஞ் செவிக் கேளாய். அய்ய வாதம் பித்த சுரம் மத்தரந் தோஷ மித் தடவே.

வாத_பித்த_தோஷக்_குணம்:-

சிக்கிக் கிழியும் உழலைக்கும் சிரவு மதிர மிக்குத் தடிக்கும். மெய்க்கு விதனமாயிருக்கும். வேது விக்கு மிவை அய்ந்தும் தக்க தாகம் பரிகரிக்கும். சரியாய் பித்த சேத்தமமும் மைக்கன் வாரம் வாங்காமல் மண்ணுஞ் சன்னி விஷ சுரமே சத்த பேதி விதிருகம் சக்க விரியன் சில் விஷமும் அத்தரூச பவ விறவின் அரிய கலிக்க மிது தானே.

நல்ல பாம்பு தலை நாகம் நாடியே வறவும் முளகுள்ளி நல்ல உப்பை சரி கூட்டி நாடி ஊமத்தஞ் சாறு விட்டு வில்லந் துளசி நசியமிட வீரிய நாகமில்லை யிதே.

அச்_விஷசுர_குண_நசியம்:-

சாறணை யுறைந் தலை கும்ம் சரி யரிதாரந் தான் கூட்டி கூரிய சகன்

not useful

சாத்ததிலல் நலமாங் கட்டிய அரைத்துண்டை பண்ணி மரையால் மேனிச் சாமடனே மன்னிய கலிக்க மிட விடூ மீளும். சகல ரோகங்களும் தீரும்.
சகல கலிக்க மிருதானே. மஞ்சள், மிளகு, குங்கிலியம், மத்தம் தாரம் வண்டோடு ஞ்சா மாத்திரை கடுதாரு சுள்ளு நெய்யில் திரியேத்தி நஞ்சா யிருந்த நயனத்துள்ளே யிடி யிடிப்பு மஞ்சா பித்தமும் உரி தானேத் தம்புகை யிரவே. எருக்கம் வேரும், சமூலமுடன் யினிய வில்லம் யேழு பலம் யசுந்த கூந்தல் (ஏடு இல்லை)

சேத்தும குணம்:-

not required

வாந்தியாம். வயிறு போகும். பல்லு வாயுணர்ந்து போகும். தாழ்ந்திடுங் கை கால் தாகும் தலைவிலா மயக்க முண்டாம். வீழ்நதிடுங் கை கால் தாகும். வெருவியங் கோபமுண்டாம். அயாகிடும் வேர் விச்சேரும். அப்பிர மஞ் சேத்துமந்தானே.

பித்த சன்னியின் குணம்:-

கய்யிற முடம்பு தான் துடிக்கும். கண்ணு சுழிக்கும். வயறெரியும். மெய்யும் நாவும் சொற் குழறி மேவியல் லொக்கன்ன சொரூம். அய்ய மென்ன செவி கெடி அறவே சப்பிக்குங் கண் குளிரும். மெய்யும் கனக்கு மாகு பிறத்தே பயித்திய சன்னி யிருதானே.

வாத சன்னி குணம்:-

பதமா பல்லு கால் கை குளிரும். பரிவால் வாறு பல் கடுக்கும். சிதங் குளிரு முடன் முனிப்பு சிறிய வயறுமாய் நோகும். காதம் பக்கம் வலியுண்டாம். சுருவிய் பிழிய ம் கண் சிவக்கும். வாதம் வாய் மேல் மேல் நோக்கும் வாத சன்னியிழ் தானே.

கலிக்கம்:-

not useful

குதிரை அதின் தோலும் கழினக் கழியுன கழிப் பொருக்கும் தாயைக் கொன் றுன் சாத்துடனே தாட்டாகங் காய்ச்சிக் குடிப்பீராய். மானைப் போலே விழி மடவீர். வாரெதமுமுங் குணமாகும். காயங்காய மறித்தார்ங் கூா கலவாயித மிந்துப்பு பேயன பிற கஞ்சாத்துடனே பேணி யரைத்தங் குண்டை செய்து மாய கலத்தில் பிறந்தெயித்து மண்டார் கண்ணிலிடுவீராய் காச்சல் சன்னி விடூச மோதிம கரு பகரும கண்டீரே.
ஸ்ரீராமஜெயம்.

அய அக்கினி பற்பம்:-

not clear

நாலு சுத்தி சிலருண்டு நல்ல கெந்தகம் நாலுரெண்டு கல்க் காந்தம் நாரு கனிய லேகம் மிருக்குடி ஏலம் குமாளாலம் மிதன்னில் எசந்த குமரிச் சாறு வாத்து அரைத்து கால கிண்ணியில் தம்பி வக்க கனலா எரியம் கண்டீரே.
இதுக்கு தீரும் வியாதி:- பாண்டுவ ரோகம், சோகை காமாலை, செரியா குணம் இது தீரும். இதுக்கு அனுபானம் தேனில் பழவெடை கொடுக்கவும்.

பிள்ளை மதிச்சது விழ:-

அதிமதுரந் தேனூட்டரைத்து உருண்டை பண்ணி கொடுக்கவும். சித்தா மணக்கு வேர் அவள் முந்தானியில் முடிய விழும், சீக்காய்ப் புருப்பு மூளை வாங்கிப் போட்டு பெருங் காயம் விராகனெடை ஒன்று இந்துப்பு விராகனெடை. ஒன்று இது மூனறு விராகனெடை ஒவ்வொன்று பெருங்காயம் பொரிச்சுப் போட்டு கூட்டி அரைத்து உருண்டை பண்ணி

not useful

ஐந்து வேளை கொடுக்கவும்.

~~மேக ஊதுழ விந்து உடைந்தால் இவைக்கு மருந்து~~ :- Incomplete

பாடகம் போல காயகாகு கருவேலம் பூ விசைக்காயிலை விசை கயிவை நாலொன்றாய்க் கூட்டி இடித்து சூரணம் பண்ணி சாப்பிடவும். காலமே பசுவின் பாலில் கொள்ளவும். சாயங்காலம் காடியில் கொள்ள இப்படி ஒரு மண்டலங் சாப்பிட்டால் அநேக பலமுண்டாம். இதுக்கு இச்சா பத்தியம்.

வெள்ளெருக்கஞ் செடி சமூலம் ஊமத்தை செடி வேர், சமூலமும் இந்த நாலு வேரும் கழுவிப் போட்டு கருணையாய் நரிச்சு குறணி பசுவின் பால் வார்த்து பானையில் போட்டுக் காய்ச்சி அந்தப் பாலைக் குடுவையில் வார்த்து புரை குத்தி காலமே கடைஞ்சு எடுத்துக் கொண்டு வேளாம் பூவும் பக்குறிதி வேரும் அரைத்து வெண்ணையில் கூட்டிச் சிமிளில் வைத்துக் கொண்டு எள்ளு பிரமாணம் வெத்திலையில் ----

நீர் சுருக்கு மருந்து :-

கருவேப்பிலை, சீரகம் அரைத்து தயிரில் குடிக்கவும். வேழிலாரியிலை இடிச்சு சாறு வாங்கி நல்லெண்ணெய் கலந்து மூன்று காலை குடிக்கவும். இப்படி பசுவின் நெய்யில் கொடுக்க மேகம் மாறும். கடும் பத்தியம். ~~நீர்~~

நீர் சுருக்கு வெள்ளைக்கு :-

முருங்கைப் பட்டை பலம்.க, கள்ளிப் பட்டையு அரைத்து உருண்டை பண்ணி கொட்டைப் பர்க்களவு அதிகாலமே கொள்ளவும். மிளகு அரைப் பலம் அரைத்து உத்தாமணிச் சாத்தில் சர்க்கரை கூட்டி நல்லெண்ணையில் கலந்து சாப்பிடவும். நீர் சுருக்கு நிற்கும்.

சிறு பிள்ளைகளுக்கு குருத்தி :- Not useful

ஆமணக்கெண்ணை படி.வ; ஈரவெங்காயச் சாறு படி.வ, நுணையிலை சாறு படி.க, இது கூட்டிக் காய்ச்சிசும் போது வசம்பு மஞ்சள் அது வகை ஒன்றுக்கு விராகனெடை.க, பொடி செய்து போட்டு மெழுகு பதத்திலிறக்கிக் கொண்டு எட்டு நாளைக் கொருக்கால் ஒரு கறண்டி சாப்பிடவும்.

பல் மருந்து :- Incomplete

*-------ரை வேர் ----- ந தோல் நற் கருங்காலி களிப்பாக்கு காசுக்கட்டி புழுங்கல் அரிசி இது வெல்லாம் ஒரு பானையில் போட்டு நாழுழி தண்ணீர் வார்த்து நாழியாக காய்ச்சி காலமே கொப்பளிக்கவும். பல்லு உறுதியாம். இது கை கண்டது.

பித்த சுரத்துக்கு மருந்து :-

கொத்தமல்லி, சீரகம், திப்பிலி மூலம், வாய்விளங்கம், சுக்கு, வில்வப் பத்திரி வேரும், பேய்ப்புடல், நரிப் பயத்தங் கொடி, பற்படாகம் வகை ஒன்றுக்கு கழஞ்சு இரு நாழி தண்ணீரில் ஒன்றாக வடித்துக் குடிக்கவும். நன்றாக வடிக்கவும். இதுக்கு கலிக்கம் :- லவங்கம், தாளிச்ச பத்திரி, கோஷ்டம், கருஞ்சீரகம், திப்பிலி, வறுத்து கொடுக்கப் பித்த சுரந் தீரும். ~~வாத சுரத்துக்கு நசியம்~~:

வாத சுரத்துக்கு நசியம் :-

சாதுவளை, மரமஞ்சள், தம்பராஷ்டகம், பறங்கிப் பட்டை, பிறப்பங் கிழங்கு, கண்டு பறங்கி, ~~மண் திட்டி~~ மருதேஷ்டி, வேப்ப முத்து, ஊமிச்சி ஒடு, சீரகம்,

கருஞ்சீரகம், வெந்தயம், கார்போக அரிசி, அத்தையெல்லாம் இடிச்சு வெந்நீர் தண்ணீரிலே புழிஞ்சு மூன்று நாளைக்கு பால் அடையில் வார்க்க நிற்கும்.

முண்டிகை_அச்சரத்துக்கு_மருந்து:-

நரிஞ்சிக் காளான் எருமுட்டை, புண்ணக்கு, மணத்தக்காளி இலை, வல்லாரை, கற்பூரம், வள்ளியிலை, சாதிக்காய், லவுங்கப் பூவு இது வெல்லாம் போட்டு எண்ணை ஆக்கி வாத்தால் முண்டிகை அச்சரம் இதுவெல்லாந் தீரும்.

உள்_காச்சலுக்கு_மருந்து:-

பசுவின் நெய் நாழி, சீரகம் பலம்.உ, சர்க்கரை பலம்.ச, சாதிக்காய் சாபத்திரி, கரும்பு இது வெல்லாம் பொடி பண்ணி சிறுகீரை யிடிச்சு, அத்தை கொதிக்க வைத்து உள்ளுக்கு சாப்பிட்டால் மாந்தைக் காச்சல், உள் காச்சல் இது வெல்லாம் தீரும்.

உப்பு_மாந்தை,_கிரி_மாந்தை,_வெறு_மாந்தை_இந்த_மாந்தைகளுக்கு_மருந்து:-

வறுத்த முத்து எண்ணை நாழி.க,-க்கு பாலை வேர் மாந்தை பூண்டு மணத்தக்காளி வேர், கண்டங் கத்திரி வேர், இதுகள் கொண்டு வந்து குருசாணி ஓமம், கடுகுரோகணி, வெப்பாலை அரிசி இது வெல்லாம் போட்டு எண்ணை வடித்து கொடுக்கத் தீரும்.

கரப்பானுக்கு_மருந்து:-

வறுத்த முத்து எண்ணை நாழி கொட்டைக் கிறந்தை வட்டக் கிலுகிலுப்பை, நதி வல்லாரை யிலை, கருநொச்சி யிலை, மிளகறணைப் பட்டை, செருப்பட்டை, காய பத்திரி, இலை, கஞ்சா கோரை, உள்ளி விசம்பு, மஞ்சள், திப்பிலி, கடுகுரோகணி, கார்போக அரிசி, வெப்பாலை அரிசி, நீரடி முத்து இதுகள் இடிச்சு சாறு பிழிஞ்சு கடைச் சரக்கு எல்லாம் இடிச்சுப் போட்டு (என) ஏடுகள் இல்லை)

முறை_முறைக்_காச்சலுக்கு_மருந்து:-

முறைவாற வேளை பார்த்து புழுங்கலரிசி ஏழும் மிளகு ஏழும் சிறு புள்ளடி வேர் இந்த மூன்று வகையும் மஞ்சள் துணியிலே முடிஞ்சு ஒரு வகையிலே கூட்டிக் கொண்டு ஊருக்கு வெளியே போய் சந்தை வழியிலே இருந்து ஒருவரோடே பேசி வந்தால் காச்சல் விட்டுப் போம்.

நீர்_அழுவைக்கு_மருந்து:-

வயிகரி, சுந்தாம தானிக்காய், சுக்கு, மிளகு, திப்பிலி, செங்கோஷ்டம், கோஷ்டம், கல்நார், காவிக்கல், சதாகுப்பி, வேலங்காய், ஆவாரங்காய், நார்த்தங்காய் ஒத்த பிஞ்சிக் காய் இது வெல்லாம் பொடி பண்ணி புண்ணக்கிலே கலந்து கொடுக்கிறது. கொடுக்க நீர் அழுவை நிற்கும்.

கண்ணிலே_பூப்பட்டு_இருந்தால்_மருந்து:-

குதிரைக் குளம்பு வேர், வெள்ளை சாறு வேளை வேர் இது இரண்டும் பாலிலே வெவிச்சு வைத்துக் கொண்டு முலைப் பாலிலே உரைச்சு பூப்பட்ட கண்ணுக்கு போட கண்ணு பூவு எகிறும்.

மாலைக்_கண்ணுக்கு_மருந்து:- நீலம் பூத்தாப் போலே வரப்போ மேலெழுளைச்சு

இருக்கும். பித்த குத்தா மூளைச்சு இருக்கும். அதுவுங் கரிசலாங் கண்ணும் இரண்டுங் கூட்டி சாறு புழிஞ்சு கொண்டு அரைப் பலம் மெழுகு கூடப் போட்டு சாப்பிடவும். மாலைக் கண் தெளியும்.

விடக்கடி தயிலம்:-

எட்டிப் பழம், குறணி கோசல பட்டை சாறு நாழி அறுகங் கட்டை சாறு நாழி சிறு நாகப்பட்டை சாறு நாழி, வேப்பம் பட்டை சாறு நாழி, ஆனை வணங்கிச் சாறு நாழி, இலுப்பைப் பட்டைச் சாறு நாழி, மூசுமூசுக்கைச் சாறு நாழி, குப்பை மேனிச் சாறு நாழி, வேம்பட்டைச் சாறு உழக்கு நல்லெண்ணை நாழி இது வெல்லாம் ஏகமாய்த் தயிலம் பண்ணி வெட்டை சரிகிறதுக்கு பதினைந்து நாளைக்கு தலைக்கிட்டு முழுகினால் வெட்டை யெல்லாந் தீர்ந்து விடும். சரீரமும் சுத்தமாம்.

பிள்ளைப் பெத்த பேருக்கு இறப்பு வந்தால் கல் பாஷாணச் சுத்தி:-

இறப்புக்கு பெருஞ் சவுரிப் பழங் கொண்டு வந்து நல்லெண்ணையில் போட்டு முழுக இறப்பு தீரும். நல்லெண்ணையில் மோரில் கோமூத்திரத்தில் காடியில் எருக்கம் பாலில் காறனங்கள் சாத்தில் இதில் ஒரு வகைக்கு ஏழு தரங் காய்ச்சிக் கொண்டு இப்படி சுத்தி பண்ணிக் கொண்டு வைக்கவுந் தீரும்.

மூச்சிக்கு மருந்து:-

கரிசிலாங் கண்ணி சாறு புழிஞ்சு கொண்டு அரைப் பலம் மிளகு பதினைந்து நாளைக்கு உள்ளுக்கு கொடுக்கத் தீரும். (இடையில் அய.அக.அஉ.அ ஏடுகள் இல்லை)

குடுவன் புண்ணுக்கு மருந்து:-

வெள்ளைக் குங்கிலியம் வங்காளப் பச்சை டிக்கு மல்லி, கார் போக அரிசி, கருஞ் சீரகம், நீரடி முத்து, கருங் குங்கிலியம், காசுக் கட்டி, களிப் பாக்கு, பாசித்தம் மயில் துத்தம், செம்பிரான் பட்டை, அதிவிடையம், தேன், மெழுகு பலம்.க, விளக்கெண்ணை சேர்.க, இது கடைச் சரக்கு வகை ஒன்றுக்கு விராகனெடை.க, எண்ணையில் ஆக்கி புண்ணுக்கு பத்து போடவும்.

விப்புருதி வந்து ஒடுக்கு விழுந்து ஆறாத புண்ணுக்கு மருந்து:-

ரசங் கால் பணத்துக்கு வாங்கி உப்பு ஒரு படி ஒரு புதுச் சட்டியில் போட்டு அது நடுவே அந்த ரசத்தை வைத்து சந்து விடாமல் சுத்தி ஆவி மேல் போகாமல் ஒரு சட்டி மூடி செம்மண் பூசி அடுப்பிலே வைத்து பிசைந்து ஒரு சாதி விறகு போட்டு எரிவிடவும். சட்டி வாய் அது பதம் வந்த போது பலாப் பழம் வாசனை வரும். அப்போது எரிவிடாதே.விட்டு விடவும்.ஆறின பிறகு எடுத்து திறந்து பார்த்தால் மேல் சட்டியில் மை போலே பத்தியிருக்கும். அதை நல்ல வெல்லத்தில் பிரட்டி பிசைந்து சுண்டைக்காய் பிரமாணம் உருண்டை பண்ணி தின்னவும். இதுக்கு பத்தியம் வெந்நீருஞ் சோறுங் கொடுக்கவும். காத்து படாமல் இருக்கவும். ஏழு நாள் சென்ற பிறகு அகத்தியிலைச் சாறு உழக்கு பச்சை வெத்திலைச் சாறு உழக்கு எருமைச் சாணி புழிஞ்சு கொண்டு ஒன்றாகக் கலந்து கொண்டு உச்சந் தலையில் இருந்து உள்ளங் கால் மட்டும் பிடித்து காஞ்ச தண்ணீர் வார்க்கவும். அதன் பிறகு சீரகம், மஞ்சள் பத்து மிளகு அதில் ஒரு மிளகு கருகச் சுட்டுக் கொண்டு வெறுஞ் சாறு காய்ச்சி சவுறு உப்புங் கூட்டிக் கொள்ளவும். இப்படி மூன்று நாளைக்கு இந்தப் பிரகாரந் தின்னவும். ஆறாத புண்ணுங் கிரந்தி புண்ணு சேஷ்ட்டையுந் தீரும்.

கறுண_மூலத்துக்கு_மருந்து:-

இது கடினமான மருந்து. ரசம் விராகனெடை.க, நெல்லிக்காய், கெந்தகம் ஒருங் காய மரிவாதி, எருக்கம் பால், எருக்கங் கரி, சுண்ணும்பு, தண்ணீர் விட்டு எருக்கம் பாலுங் கூட வார்த்து எல்லாம் உரைச்சுப் பத்து போடவும். கரைந்து போம். இது கை கண்டது.

வெகு மருந்து கறுண மூலத்துக்கு காட்டுப் பூசணிங் கிழங்கு கொண்டு வந்து கொஞ்சம் உப்பு போட்டு அரைத்து அந்த வீக்கத்தின் மேலே பூசவும். கரைத்துக் கொண்டு போம். பிறகு காஞ்சுரி யிலை கொண்டு வந்து அரைஞ்சுப் பூசவும்.

வேறு_மருந்து.

வெப்பாலை பட்டையை கசக்கி அந்தப் பாலை ஊட்டி வீக்கத்து மேலே வைத்துக் கட்டவும். வீக்கம் வாங்கிப் போம். அதன் பிறகு நிலப் பனைக் கிழங்கு கொண்டு வந்து அரைத்துப் பால் வார்த்து அரைத்துப் பசவும் குணமாம்.

கண்ட_சன்னிக்கு_கசாயம்:-

மிளகு விராகனெடை.க, தாளிச பத்திரி விராகனெடை.க, செவியம் விராகனெடை.க, திப்பிலி விராகனெடை.க, ஏலஅரிசி விராகனெடை.க, அதிமதுரம் விராகனெடை.ங, சுக்கு விராகனெடை.உ, தாலசொண்டி விராகனெடை.க, கற்காடசிங்கி விராகனெடை.உ, இது வெல்லாங் கூடப் போட்டு இரு நாழி தண்ணீர் வார்த்து காய்ச்சி எட்டிலொன்று வடிச்சு குடிக்கவும். இது குணமாம். இதுக்குப் பத்தியம் நச்சுப்புங் கூட்டவும். புளிப்பு தவிர்க்கவும். ஆரோக்கிய நமஸ்து.

வாத_பித்தம்_வாயிலெடுக்கும்_அன்னந்_தக்காத்துக்கு_மருந்து:-

பயறுங் காலி வேர், பாறமுன்னி வேர், வெம்பல வேர், முசுமுசுக்கை வேர், நல்ல முள்ளி வேர், வில்லைப் பத்திரி வேர், வேப்பம் யீர்க்கு இது வெல்லாங் கூடப் போட்டு இதுக்குங் கலப்பு சுக்கு, மிளகு, தெசாவரம், சீரகம், திப்பிலி, இது வெல்லாங் கூட்டி ஒரு பிடி போட்டு கசாயம் போடவும். கடை சரக்கு முடிஞ்சு கட்டிப் போடவும். மூன்று பொழுது குடிக்கவும். இது குணம். பத்தியம் புளி ஆகாது.

ரத்த_பிரமியத்துக்கு_மருந்து:-

புங்கம் வேர் கொண்டு வந்து மேல் புறணி சீவிப் போட்டு இழைச்சுக் கொண்டு அந்தச் சாறு உழக்கு நல்லெண்ணை சேர் இரண்டு ~~அந்தச்*சாறு*உழக்கு*நல்லெ~~ அடுப்பிலே வைத்து பொன்னிறமான பிறகு இறக்கி கொண்டு விநயகன் பூசை பண்ணிக் கொண்டு விடிஞ்சு கிளரி பாலடை சாப்பிடவும். இதுக்குப் பத்தியம் உப்பு, புளி ஆகாது, இது கை கண்டது.

பிரமியத்துக்கு_மருந்து:-

வெள்ளைப் பூலாந் தழை கொண்டு வந்து அரைத்துக் கொண்டு ஆவாரைக் கொட்டை பிரமாணம் உருண்டை பண்ணி பசுவின் வெண்ணையும் முழுங்கவும். காரம், புளி தவிர்க்கவும். கெலிப்பு பணறம் தவிர்க்கவும். அந்திக்கும் விடிஞ்சும் குடிக்கவும். இருபது நாள் மட்டும். பன்னிக் கறியும், அவரைப் பருப்பு, பூசணிக்காயும் இது வெல்லாந் தின்கவும். மருந்துங் குடிக்கவும். பிறகு இருபது நாளைக்கு கிரந்தி பண்டம் ஆகாது. புளி விடவும். உப்புங் கூட்டவும். இது நாற்பது நாள் கொள்ளவும். கெறந்தி உலை இது வெல்லாந் தீரும்.

உன்மத்துக்கு மருந்து :-

தேசாவரம் சேர் ½ திப்பிலி சேர்.வ, காவேளை வேர்ப் பட்டை சேர்.வ, இது மூன்றுஞ் சூரணம் பண்ணுகிற வயனம். தேசாவறந் திப்பிலியுந் துணியிலே மூட்டை கட்டி ஒரு குடுவையிலே சுண்ணம்புக் கல்ப் போட்டு அதின் நடுவே முடிச்சு வைத்து தண்ணீர் வார்த்து மூடி வெந்த பிறகு முடிச்சை எடுத்துக் கொண்டு நிழலில் உலர்த்தி சூரணம் அதிலே காவேளை பட்டை சூரணம் கால் சேர் கூடப் போட்டு கலந்து அந்திக்கும் வெடிஞ்சு சாப்பிட்டுக் கொண்டு வரவும். தீராத உன்மங்கள் தீரும். இதுக்கு பத்தியம் புளிப்பு தவிர்க்கவும்.

பிள்ளை தங்காத வேருக்கு ம் தோவுக்கு மருந்து :- Incomplete

ஆகாச கெருடன் கிழங்கு ஒரு கிழங்கு கொண்டு வந்து நெய் ஒரு மானங் கொண்டு வந்து இதுக்கு கடைச் சரக்கு ஒரு கட்டெடை லவுங்கம், விராகனெடை.க, சாதிக்காய். ½ ஈர வெங்காயம் எ, திப்பிலி துக்காணி எடை பசுவின் நெய்யுங் காய்ந்து பின்னே வெங்காயத்தை நசுக்கிப் போடவும். அதின் பிறகு கிழங்கை பாலேடு போலே வட்டமாகஅறுத்து போடவும். (ஏடுகள் இல்லை.)

விராலி விரை, கோரைக்கிழங்கு, கஞ்சா செடி, நிலப் பனைக் கிழங்கு, தண்ணி மிட்டான் கிழங்கு இது வெல்லாம் வகை ஒன்றுக்கு பலம் ஒன்று இடித்து சூரணம் பண்ணி தேனில் அநுபானம் பண்ணிக் கொண்டு சாப்பிடவும். பயித்தியங் குன்மம் தீரும். இது கை கண்டது. புளி தவிர்க்கவும்.

ரத்த கடுப்புக்கு மருந்து :- not useful

அபினி விராகனெடை.க, துரிஞ்சி அரப்பில் சாத்தில் உரைச்சுக் கொடுக்கத் தீரும். நாகப் பட்டை, அத்திப் பட்டை, மாம்பட்டை இது மூன்றும் கசாயம் போட்டு கசாயத்தில் சாதிக்காய், சாபத்திரி இது இரண்டும் கசாயத்தில் கொடுக்கத் தீரும்.

பெரு வியாதிக்கு தயிலம் :-

சிவனார் வேம்பு 2 வரித்தும்மட்டி விரை வள்ளு.உ, பேய்ப்பீர்க்கம் விரை வளு.உ, அளிஞ்சிக் கொட்டை வளு.உ, எட்டிக் கொட்டை வள்ளு.உ, விளாம் பொருக்கு கூடை.க ? ஆனைச்சீரகம் வள்ளம்.உ, வேப்பங் குச்சி சிமை.உ, மிளகு படி இது வெல்லாம் வேறே வேறே தயிலம் இறக்கிக் கொண்டு கூட்டிக் கொடுக்கிற வயணம். எட்டித் தயிலமத்தோடே இந்தத் தயில மெல்லாங் கொஞ்சம் கொஞ்சம் வார்த்துக் கலந்து கொண்டு மேலுக்கு பிடிப்பிக்கவும். தயில மெல்லாங் கூட்டி உள்ளுக்கு கொள்ளவும். இதுக்கு பத்தியம் புளி விடவும். இது ஒரு மண்டலங் கொள்ளவும். மேலுக்கு பிடிபிக்கவும். நாற்பத்தி நாலு நாளைக்கு முழுவதும் வார்க்கவும்.

பூவானங் காய் கொண்டு வந்து சுடு தண்ணீரில் போட்டு தேய்க்கவும். நுரையுங் குழம்பும் தலைக்கு வார்த்து முழுகவும். இந்தப் பிரகாரம் மூன்று மண்டலங் கொள்ள பெரு வியாதி தீரும். இது கை கண்டது.

நீர் அழுவைக்கு மருந்து :-

நெல்லிக்காய், தானிக்காய், கடுக்காய் இந்த மூன்று வகையுங் கொட்டை வாங்கிப் போட்டு வெள்ளாட்டுக் கோமியம் நாழி.எ, எருமைக் கோமியம் நாழி.எ, மாட்டுக் கோமியம் நாழி.எ, அதில் இந்த மூன்று வகையும் ஊறப் போட்டு ஏழு நாள் மூடிக்கவும் நிற்கும். அதின் பிறகு அடுப்பிலே வைத்து எரி விட்டு காய்ச்சி தயிலம் பண்ணிக் கொண்டு சாப்பிடவும். நீர் அழுவை தீரும். இதுக்கு பத்தியம் புளி தவிர்க்கவும்.

<u>சீத சுரத்துக்கு மருந்து</u> :-

சீக்கு சாத்தில் கொடுக்கவும். நொச்சிலை சாந்தில் கொடுக்கவும். இந்த மருந்து வகை இந்தச் சாத்தில் கலந்து குடிக்கிறது. இரண்டு பாசாணமுஞ் சரியாய்க் கலந்து ஒரு குடுவையிலே சுண்ணாம்பு கல் போட்டு இந்த மருந்து சுணியிலே முடிஞ்சு அந்த சுண்ணாம்புக் கல் கொட்டி மூடி தண்ணீர் வார்த்து வெந்த பிறகு மூச்சை எடுத்து தண்டு பசுராயிருக்கிற ஊமத்தை சாத்தில் ஒரு சாமமரைத்து பயறு பிரமாணங் குளிகை பண்ணி நிழலில் உலர்த்தி வைத்துக் கொள்ளவும் சுரம் வரத்தக்கு முன்னே ஒரு சாமமென்ன ஒரு குளிகை மோரில் உரைச்சுக் கொடுக்கவும். சுரந் தீரும். இதுக்குப் பத்தியம் மோருஞ் சோறும் இடவும்.

(எடுகள் இல்லை)

Incomplete

<u>சீத சுரத்துக்கு மருந்து</u> :-

not clear not useful

காரீயமும், வெள்ளியமும் சரியாகக் கலந்து திரிபாலை சாத்தில் வைத்து பின்பும் எண்ணை மோரும் கூட்டி அவைமுன்னில் ஏழு தரங் காய்ச்சி தோய்த்து பத்ததகடாக்சி சிறுக நறுக்கி இதுக்கு வசுகுபிஞுலே ஒரு பங்கு நெய்யில் பொரிச்சு இது ஒன்றுங் கூட்டி மத்திச்சு பொடியாக்கின பொடியிலே ஒரு நெல்லிக்காயிடை இஞ்சி சாத்திலிட சீத சுரந் தீரும்.

<u>வலிப்புக்கு மருந்து</u> :-

வேப்பெண்ணை சேர்.க, நெய் சேர் .க, நல்லெண்ணை சேர்.க, இதுக்கு கடை சரக்கு லவுங்கம் தட்டு எடை.உ, கொப்பரை சேர். 1½, இதுக்கு வனமுல்லை சாதிக்கள்ளி வெட்டிப் பிளந்து கெற்பத்தின் சோறு வாங்கிக் கொள்ளவும் உரிச்ச தேங்காய்ப் பிரமாணம் கொண்டு வந்து வெள்ளைப் பூண்டு உரிச்ச பருப்பு படி ஒன்று ஐந்து எண்ணையுங் கூட்டி அடுப்பிலே வைத்து வெந்த பதத்தில் இறக்கி விநாயக பூசை பண்ணி உச்சி ஒரு கறண்டி குடிக்கவும். வலிப்பு தீரும். இதுக்கு பத்தியம் புழுங்கலரிசி, துவரம் பருப்பு ஆகும்.

<u>வலிப்புக்கு மருந்து</u> :-

எருக்கம் பட்டை சேர்.க, சித்திர மூலம் வேர்.க, தும்மட்டிக்காய் சேர்.க, மாவிலிங்கப் பட்டை சேர்.க, முருங்கைப் பட்டை சேர்.க, ஆதண்டை பட்டை சேர்.க ஆயில் பட்டை சேர்.க, உத்தாமணி வேலி குப்பிய மேனி மூன்றும் சேர்.க, பெரு மரம் பட்டை சேர்.க, ஆக வகை.யக, இடித்து கசாயம் போட்டு இதுக்கு கடை சரக்கு நேர்வாளம், நீரடிமுத்து உப்பு, இந்துப்பு, பொட்டிலுப்பு, வளையலுப்பு, குருஞ்சுப்பு, செந்துப்பு சவுக்காரம், படிக்காரம், வெண்காரம், மூங்கிலுப்பு நீ நவாச்சாரம், எவாச்சாரம், பெருங்காயம் கண்டு பறங்கி, கடுகுரோகணி இது வெல்லாம் கூடப் போட்டு பற்பம் பண்ணி சாப்பிடவும். வலுப்புந் தீரும். வயிற்று கட்டி தீரும்.

<u>கண்ணோவுக்கு மருந்து</u> :-

கத்தாளஞ் சோறும், கூளாக் கட்டியும், ஈர வெங்காயமும், புளியம் பழம் கொஞ்சமாய் உப்பு கட்டியும் சிறு நீர் வார்த்து வேக விட்டுசுணியிலே கொண்டு கண்ணிலே புழியவும். அந்தப் பொட்டணத்தை கண்ணில் ஒத்திடவும். பிறகுங் கத்தாழைஞ் சோறு எடுத்து அரைத்து கண்ணெஞ் சுத்திலும் பத்துப் போடவும். இது கை கண்டது.

பின்னேயுஞ் சிகப்பு இருந்தால் தவசு முருங்கையிலே வேக வைத்த அந்த தண்ணீரிலே கண்ணே கழுவிப் போடவும் சிகப்பு மாறும்.

பதினெட்டு வகையும் மாறும்:- 14.12.62.

ஆவாரம் இலையைக் கொண்டு வந்த காடியில் கரைத்துக் கொடுக்க எடுக்கும் பதினெட்டு நஞ்சு தீரும். இது கை கண்டது.

வெண்காரம் உப்பு படி 4, கத்தாழஞ் சாறு படி.4, சதிரக் கள்ளிப் பால் படி.4பால் படி.க, விளக்கெண்ணே படி. 4, இது வெல்லாங் கூட்டி பானேயிலே வார்த்து குப்பையிலே புதைக்கவும். ஆறு மாதம் இருக்க விட்டு எடுத்தால் பலகையாய் விழும். அதை எடுத்து வேளேக்கு கூட்டிக் கொள்ளவும்.

தேளுக்கு மருந்து:-

சவுக்காரம், கழற்சிக்காய், பரும்பருப்பு உப்புக் கட்டி, பெருங்காயம், எருக்கம் பால் விட்டு அரைத்து உருண்டை செய்து வைத்துக் கொண்டு எருக்கம் பாலிலரைத்து சீலையில் வத்தி பிடிச்சு அதின் சாம்பல் ஆவ நெருப்பில் கொளுத்தி மூக்கில் புகை பிடிக்க தும்மலெடுக்கும். கடிச்ச வாய் நிற்கும்.

வேறு மருந்து.

அளிஞ்சி விரை, புங்க விரை, செந்நீங்கொட்டை, எலுமிச்சம் விரை, பேய் சொறீர் விரை இது வெல்லாங் கூட்டி தேனிலரைத்து சிமிளில் வைத்துக் கொண்டு கடித்த வாயில் பூச நோவு நிற்கும். இது கை கண்டது.

தாளிச பத்திரி சூரணம்:-

தாளிச பத்திரி விராகனெடை.க, மிளகு விராகனெடை.உ, திப்பிலி விராகனெடை, மூன்று கிராம்பு விராகனெடை. 4, சுக நச்சி விராகனெடை.க, ஏலம் விராகனெடை 3 கேநீர் விராகனெடை.ரு., சர்க்கரை பலம். 6 இந்த மருந்தை எல்லாம் வெய்யிலில் காய வைத்து அரிச்சில் பொன்னக்கில் வண்டு கொண்டு சக்கரை குகை நீர் கூட கலந்து புதுக் கலத்தில் வைத்துக் கொண்டு அந்தப் பதத்தில் வெரு கடிப் பிரமாணம் தின்னவும். இதுக்கு தீரும் வியாதி பித்த வாய்வு, காறணி பான்டுவ ரோகம், வாத பித்தம், குன்மம், வாதமூலம், சீத வெ ளேபீசம், சுவாச காசம், இருமல் இவையெல்லாந் தீரும். ஆரோக்கிய நமஸ்து.

தாளிச வடகம்:-

அக்கினி மந்தம். அக்கினி மாந்தமாய் சதா காலம் காச்சி சல்குறல் யிடிய விழுந்த வாயானே யிலா---க்கு மருந்து:-

தாளிச புத்திரி கழஞ்சு.உ, மிளகு கழஞ்சு.உ, செவியம் கழஞ்சு.உ, திபிபிலி கழஞ்சு.ச, திப்பிலி மூலம் கழஞ்சு சுக்கு கழஞ்சு..யஉ, கடுக்காய் கழஞ்சு.உ, நெல்லி முள்ளி கழஞ்சு.உ, ஏலங் கழஞ்சு.உ, லவுங்கப் பத்திரி கழஞ்சு.உ, வேலாம் பிச்சி வேர்கழஞ்சு.உ, இவை யெல்லாம் உலர்த்தி பன்னிரெண்டு பங்கு பொடியும் ஒரு பங்கு சர்க்கரையும் கலந்து அதின் பிறகு ஆடாதோடையுங் கண்டங் கத்திரியும்இடித்து ஒரு பானேயில் தண்ணீர் வார்த்சு போட்ரு வெண் கட்டி அதிலே சூரணம் வைத்து பிட்டாக வெந்த பிறகு இறக்கி இடித்து கொட்டை பாக்கு மாதிரி உருண்டை பண்ணிக் கொள்ளவும். இதுக்கு தீரும் வியாதி வாத பித்தம், சேத்துமம், ஆரோக்கியம், சுவாச காசம், க்ஷயம் இது வெல்லாந் தீரும். இதுக்கு பத்தியம் புளி ஆகாது. கிறந்தி பண்டம் ஆகாது.

குமைப் பாண்ட சர்க்கரை வகை:-

நீர் பூசணிக்காயை ஒரு பெரிய காயை இரண்டாய் பிளந்து குடல் வாங்கிப் போட்டு சமைத்த பதத்தில் தேங்காய் துருவிக் கொண்டு துருவி அந்த பாகு எடுத்து கொண்டு ஒடு தள்ளிப் போட்டு ஒரு பானையில் போட்டு முக்கால் பானை தண்ணீர் விட்டு அதின் மேலே அந்தப் பூவை வைத்து அகலச் சட்டி கொண்டு மூடி மண் பூசி அடுப்பிலே வைத்து எரிவிட்டு நன்றாய் வெந்த பிறகு இறக்கி சிறுக சிறுக சீலையில் போட்டு வெள்ளம் போகப் போக புழிஞ்சு திப்பிலி எல்லாம் எடுத்துக் கொண்டு அரைக்கால் படி பசுவின் நெய் அகலிய கடிக்காய் வார்த்து சிறுகச் சிறுக நெய் விட்டு தீயள்ளிப் போட்டு கறண்டி கொண்டு தள்ளாவி சிவக்க வறுத்து மொரு மொரு என்ன பதத்தில் பூவெல்லாம் வறுத்துக் கொள்ளவும். இதுக்கு பிறப்பர்கம் கண்ட சர்க்கரையாகிலும், சீனியாகிலும், படி.க, இத்க்கு கடை சரக்கு மருந்து ஏலம், சீரகம், செங்கழுநீர், கோஷ்டம், வங்கம், தானிக்காய் இது ஒவ்வொன்று மின்னே விராகனெடை கூட்டி சட்டியில் வேத்து பொடி பண்ணி வடிக்கொண்டு சாப்பிடவும்.

சொறி நோவுக்கு மருந்து:-

அமுக்கிரங் கிழங்கு கொண்டு வந்து குறுக நறுக்கி உலர்த்தி வஸ்திர காயம் பண்ணிக் கொண்டு படி சூரணத்துக்கு இரண்டு படி பாலும் ஒரு பானையில் வார்த்து ஒரு வகை விறகிலே தானே எரி விட்டு படியாகக் காய்ச்சி சிவந்த பிறகு ஒரு சட்டியிலே வைத்தி சூரணத்தைப் போட்டுபதமாக வறுத்து விநாயகனை பூசை பண்ணி சாதிக்கவும். இதுக்கு பத்தியம் உப்பு, புளி விடவும் தீரும். தப்பாது. ~~ஆரோக்கிய நமஸ்து~~.

ஒ-ஷ-குளிகை வயணம்:-

அருவா புடுங்கு கிழங்கு சேர். சுத்தெத தலை பலம்.க, காஞ்சி தலை பலம்.க பெருங்காயம் விராகனெடை.உ, பூண்டு விராகனெடை.உ, இது வெல்லாம் அரைத்து மிளகு பிரமாணம் குளிகை பண்ணி இது சாப்பிட சகலமான கெடுதலுந் தீரும். இதுக்கு பத்தியம் உப்பு, புளி விடவும்.

not useful

மேக் வாய்வுக்கு மருந்து:-

சுத்தெ வேர் பட்டை ஒரு பிடி, நாரிஞ்சி பட்டை ஒரு பிடி, படுபாக்கை கிழங்கு, நெல்லிக்காய், அரை மானம் மிளகு விராகனெடை.உ, இது வெல்லாம் இடிச்சு வஸ்திர காயம் பண்ணிக் கொண்டு சாப்பிடவும். மேக சன்னி, உப்பிசம், மேல் இளைப்பு, ஈளை இருமல் இது வெல்லாந் தீரும். இதுக்கு பத்தியம் புளி தவிர்க்கவும்.

போக மில்லாத பேருக்கு லேபனத்துக்கு மருந்து:-

வாளத்தி போளம் விராகனெடை.க, மிளகு விராகனெடை.ங, சாதிக்காய் விராகனெடை.ங, சாபத்திரி விராகனெடை.ங, லவுங்கம் விராகனெடை.ங, இந்த அஞ்சு வகையும் வஸ்திர காயம் பண்ணிக் கொண்டு தேன் காய்ச்சி வடி கொண்டு தேனில் பிசைந்து உருண்டை பண்ணி வைக்கவும். போகமில்லாத பேருக்கு தினங் களச்சிக் காய் பிரமாணம் சாதிக்கவும். லேபனம் அதிக போக முண்டாம். கிழவிக்குங் கொடுத்தாலும் அதிக போகமாம். இதுக்கு பத்தியம் புளி ஆகாது. காரம் உருதி ஆகாது.

Repetition not useful. Previously given

வாத்துக்கு மருந்து :-

வாதத்தின் குணம் சந்து சந்து கட்டி கட்டு. இதுக்கு மருந்து: சுக்கு சேர்.க, மிளகு சேர்.வ, லவுங்கம் பலம்.க, பெருங்காயம் விராகனெடை.க, வெங்காரம் விராகனெடை.½, காட்டு முருங்கைப் பட்டை சாறு புளிஞ்சு கொண்டு பண்ணவும். இந்தச் சாத்தில் இந்தக் கடைச் சரக்கு பொடி பண்ணிக் கொண்டு காலமே இந்தச் சாத்தில் கடைச் சரக்கு பொடி போட்டு சாப்பிடவும்.

இந்திரியம் உடைஞ்சு இடுப்பு நோவுக்கு மருந்து :-

பூமி சர்க்கரைக் கிழங்கு, அத்திப் பால் சேர் அரை, காட்டுத் துவரை செடி நிலைப் பனைங் கிழங்கு, நீர் முள்ளி விரை, தட்டெடை.க, லவுங்கம் சாதிக்காய், சாபத்திரி இதுக்கு அநுபானம் பாலு. பிறகு நெய் பிறகு தேன். இதுக்கு பத்தியம் கிச்சடி, நெய், பால், கோழி இது வெல்லாங் கூட்டவும். புளி தவிர்க்கவும். சகலமுந் தீரும்.

குன்மத்துக்கு மருந்து :-

கருங்கொள்ளு படி.க, உப்பு படி.க, பச்சை நெல்லரிசி படி.க, கள்ளிக் கொடி அறுத்து ஒரு பானையில் போட்டு அதிலே கொள்ளுப் போட்டு மூன்று வள்ளந் தண்ணீர் வார்த்து அடுப்பிலே வைத்து ஒரு சாதி விறகாய் போட்டு எரிவிட்டு தண்ணீர் சுண்டின பிறகு எரியாமல் இறக்கி கள்ளி எடுத்துப் போட்டு கொள்ளு உணர்த்திக் கொள்ளவும். உப்பு கருக வறுத்துக் கொள்ளவும். அந்த அரிசியும் இந்த மூன்று வகையும் வஸ்திர காயம் பண்ணி இரவுக்கும், பகலுக்கும் வென்னீர் தண்ணீரில் குடிக்கவும். இப்படி ஏழு நாள் குடிக்கவும் குன்மந் தீரும். இப்படி ஏழு நாள் மூன்று மண்டலங் குடிக்கவும்.

~~பீனசிக்கு~~ மருந்து :- பீனிசம்

தும்பைப் பூவும் பயறு காயும் நொச்சிக் கொழுந்து சுண்டைக் கொழுந்து இதை மூக்கிலே ஏழு நாளைக்கு நசியம் விடவும்.

வெகு மூத்திரம் ~~பெயற பெருக்கு மருந்து~~ :-

சிவப்பு நெருஞ்சி வேர், ஒரு புடி, கீழா நெல்லி வேர், ஒரு பிடி, சுக்கு சித்தா மணக்கெண்ணை இது மூன்றும் கசாயம் போட்டு சட்டியில் காய வைத்து சித்தா மணக்கெண்ணை வார்த்து அதிலே வெங்காயம் நச்சுப் போட்டு வேக விட்டு இந்தக் கசாயத்தை அதிலே ஊத்திக் குடிக்கவும். வெகு மூத்திரம் நிற்கும். இதுக்கு பத்தியம் உப்பு, புளி ஆகாது. ஆரோக்கிய நமஸ்து.

காமாலைக்கு மருந்து :-

சுக்கு அரைத்து பசுவின் பாலில் குடிக்க தீரும். இதுக்கு பத்தியம் புங்கலரிசி சோறு பசுவின் பால் உண்ணவும் காமாலை தீரும்.

பைத்திய குன்மத்துக்கு மருந்து :-

ரஸ்தாளி பழம்.குய, அதை உரிச்சு ஒரு புதுச் சட்டியில் போட்டு ரூயபுரிச் சர்க்கரை சேர்.க, அது மேல் காவி பசுவின் நெய் ஒரு சேர் அதை அதன் மேல் ஊத்தி இதுக்கு பசுற் மருந்து குப்பை மேனி இடிச்சு கம்பிளித் துணியிலே பொட்டணங் கட்டி அதின் மேலே புழியவும். இது பிழிந்து வெள்ளைத் துணியிலே வாய் கட்டி மேசிலாவே மூடி இரவிலே பனியிலே வைக்கவும். பகலுக்கு வீட்டிலே வைக்கவும்.

மூன்று நாள் ஊறின பிறகு காலம்பற எழுந்து நித்தம் ஒரு பழம் சாப்பிடவும். இந்தப் படி.உய, பழம் சாப்பிட பயித்திய குன்மந் தீரும். இதுக்கு இச்சா பத்தியம். ~~குன்மந் தீரும்.~~

?

கெற்ப __ பனை _ மனச்சிக்கு _ காச்சல் _ வந்தால் :-

Not clear

உமிக்கு நெல்லுப் பொரி அந்தப் பொரியும் பனை வெல்லம் சங்கங் கொழுந்து எலுமிச்சங் காய் பிரமாணம் கொண்டு வந்து மூன்றும் உரலிலே போட்டு இடித்து களக் காய் பிரமாணம் உருண்டை பண்ணி மூன்று நாள் கொடுக்க காச்சல் நிற்கும்.

சகலமான _ வலிப்புக்கு _ மருந்து :-

சுக்கு சேர்.வ, பெருங்காயம் விராகனெடை.ங, வெண்காரம் விராகனெடை. சயிந்த லவணம் விராகனெடை.?ஏ மூருக்கம் பிசின் விராகனெடை.க, காட்டு முருங்கை வேர் பட்டை கொண்டு வந்து இடிச்சு தன் சாறு புழிஞ்சு கொண்டு வெண் காரத்தை பொரிச்சிக் கொண்டு இது வெல்லாம் நன்றாகப் பொடி செய்து கொண்டு காட்டு முருங் கைச் சாறு வார்த்து பிசைந்து களச்சிக் காய் பிரமாணம் உருண்டை பண்ணி இரண்டு நேரமும் குடிக்கவும். இதுக்குப் பத்தியம் உப்பு, புளி சவுறப்பு போடவும். ஏழு நாள் குடிக்கவும். வலிப்புத் தீரும்.

இருமலுக்கு _ மருந்து :-

ஓமம் பலம்.க, பெருங்காயம் விராகனெடை.ங, பூண்டு பலம்.க, வசம்பு பலம்.க, தெசாவரம் பலம்.க, பெருங்காயம் ரு சற்று அனலில் காட்டிக் கொண்டு இது வெல்லாம் பொடி செய்து பனை வெல்லங் கலந்து சாப்பிடவும் இருமல் தீரும்.

மூளை _ மூலத்துக்கு _ மருந்து :-

திணைச் சோறு மூன்று நாள் உண்ணவும். இதுக்கு மருந்து முள்ளி வேர் பிடிங்கி வந்து உப்பு அரைச்சுத் தடவி கும்பியிலே நுழுந்தி வெந்த பிறகு எடுத்துத் தட்டிப் போட்டு வேர் பட்டையை அரைச்சு வென்னீரில் மூன்று நாள் கொடுக்க மூளை மூலந் தீரும். இதுக்கு பத்தியம் உப்பு, புளி இல்லாமல் திணைச் சோறு உண்ணவும். பிறகு மருந்து முள்ளுச் சுண்டை வேரும் முள்ளு காவரளை அதவளை குனறிய சுறத்தாணி பெருங்கிழங்கு மிளகரணை வெள்ளறுகு இது சரியாய் கூட்டி சூரணம் பண்ணிக் கொடுக்கிற போது தெசா வரம், வெள்ளைப் பூண்டு கூட்டிக் கொடுக்கவும், தீரும். மாறுலே சேஉடிம் கட்டினால் முன் எழுதின முள்ளு சுண்டையே மருந்து.

ஒரு _ தலை _ நோவுக்கு _ மருந்து :-

Not clear

பற்படாகம் தண்டு, சிவந்திருக்கிறதுங் கொண்டு வந்து அரைத்து புடுக்கு மேலே தடவவும். வளி புடுக்கு வாங்கிப் போம். ஒரு தலை வலிக்கு ஐதுக்கான வேப்பங் காய் கொண்டு வந்து தோல் உரிச்சுப் போட்டு இரு புறமும் உரைச்சு நூலிலே கோர்த்து மஞ்சள் தடவி மறு பாகங் காதில் கட்டத் தீரும்.

காசி _ நோவுக்கு _ மருந்து :-

மஞ்சள் சேர்.உ, குறியாட்டுப் பால் படி.க , இரண்டும் ஒரு பானையிலே போட்டு களி மண் கொண்டு வந்து அரைச்சு வைத்துக் கொண்டு ஆவி போகாமல் பொங்கினாலும் பாலு புறப்படாமல் மண் மெத்திச்சுப் பூசி அடுப்பிலே வைத்து ஒரு சாதி விறகாகப் போட்டு எரிவிட்டு பாலுஞ் சுண்டிச் சிதறி கொண்டு வரச்சே நாயுருவி இலை கொண்டு வந்து இடிச்சுக் கறண்டி பசற் புளிஞ்சு அதை திறந்து வார்த்து கிளறி

இறக்கி மூடவும். பிறகு இறக்கி நிழலில் உலர்த்தி இடித்து பொடி செய்து வஸ்திர காயம் பண்ணிக் கொண்டு அநதிக்கும் காலயிலும் இரண்டு நேரமும் சாதிக்கவும் தீரும். இதுக்குப் பாலுஞ் சோறு உண்ணவும்.

சன்னி_வாய்வுக்கு_வலிப்புக்கு_மருந்து:-

சுக்கு சேர்.க, பெருங்காயம் விராகனெடை.ந, வெண்காரம் விராகனெடை. சயிந்த லவணம் விராகனெடை. 7 ஜாதுக்கம் பிசின் விராகனெடை.க, இதுக்குங் காட்டு முருங்கைப் பட்டை கொண்டு வந்து இடிச்சு தன் சாறு புளிஞ்சு கொண்டு அந்தக் கடை சரக்கு இடிச்சு வஸ்திர காயம் பண்ணிக் கொண்டு இந்த சார்த்தை வார்த்து பிசைந்து கழுகங்காய் பிரமாணம் உருண்டை பண்ணி அந்தக் காட்டு முருங்கைச் சாத்தில் இரண்டு நேரங் குடிக்கவும். சன்னி வாதம், வாய்வு, வலிப்பு இவை யெல்லாந் தீரும். இதுக்கு பத்தியம் புழுங்கலரிசிச் சோறும், துவரம் பருப்பு வெஞ்சனம், இது ஆகும். புளி விடவும்.

இருமலுக்கு_மருந்து:-

பெருங்காயம் விராகனெடை.ந, பூண்டு பலம்.க, வசம்பு பலம்.க, தெசாவரம் பலம் க, இது வெல்லாம் வசம்பைக் கருக்கி எல்லாம் ஒன்றாகப் போட்டு இடிச்சு தாள் ஆக்கி பனை வெல்லம் போட்டு பிசைந்து இரண்டு நேரமும் அந்திக்கு விடிஞ்சு இரண்டு நேரமும் சாப்பிடவும் இருமல் நிற்கும்.

வீரியமில்லாத_பேருக்கு:-

Not useful

Bahn?

வறக் கப்பையை பிடித்து குடல் வாங்கிப் போட்டு உணர்த்தினது சேர்.க,
மண்புழு
ஆண்டிப் புழுவைப் பிடிச்சு மோரிலே உப்புப் போட்டு அதிலே கொட்டினால் மண்ணெல்லாம் கக்கிப் போம். பிறகு எடுத்து உணர்த்தினது சேர்.க, வெள்ளை வண்டு மணி சேர்.க, கரு நொச்சில் விரை சேர்.க, முடக் கொத்தான் விரை சேர்.க, கடைச் சரக்கு லவுங்கம் பலம்.உ, சாதிக்காய் பலம்.க, சாபத்திரி பலம்.க, சேப்பு சின்னி பலம்.க, இது வெல்லாம் உரலிலே போட்டு இடிச்சு சூரணமான பிறகு குறியாட்டுப் பால் வார்த்து பிசைந்து ஒரு குடுவையிலே போட்டு மேலே படிக்க மிட்டு செம்மண் பூசி குழி சாணத் தொட்டி மொந்தையை வைத்து அதின் மேலே கவிழ்த்து எரு முட்டை எடுக்கி சேறு பூசி நெருப்பு வைத்துக் கொளுத்தவும் தயிலம் விழும். தயிலத்தை சிமிளிலடைத்து கொள்ளவும். வேண்டுமென்ற போது துவரைப் பருப்ப மருவாதி எடுத்து கருப்பு வெத்திலே யில் தடவி மாணிக்கம் சுத்திக் கட்டவும். வீரிய முண்டாம். சற்பத்துக்குள்ள போகமுண்டாம்.

விரண_மேகத்துக்கு_மருந்து:-

Not useful

கள்ளிக் கசாயம். 1/2 நல்லெண்ணை துட்டுயெடை.உ, பால் துட்டு எடை.உ, பசுவின் கோமியம் துட்டு எடை.உ, வென்னீர் தண்ணீர் துட்டு எடை.உ, இது வெல்லாம் சமபாக கலந்து கொடுக்கவும். உஷ்ண மேகந் தீரும். இது கை கண்டது.

பெண்_சுருக்காக_வளத்தியாகிறதுக்கு_மருந்து:-

காஞ்சிப் பூ பலம்.க, சம்பங்கிப் ப பலம்.க, தாமரைப் பூ பலம்.க, தாமரைத் தண்டு பலம்.க, அல்லிப் பூ பலம்.க, களக்காய் பூ பலம்.க, வில்வ பத்திரி பூ பலம்.க, மாதளம் பூ பலம்.க, ஏலம் பூ கலம்.க, சாலரிப் பூ பலம்.க, வாழைப் பு பலம்.க, வல்லரைச் சாறு சேர்.க, நன்னாரிச் சாறு சேர்.க, இதுக்கு கடைச் சரக்கு சுக்கு, மிளகு, திப்பிலி, ஏலம், சீரகம், அதிமதுரம்,

Not useful

திப்பிலி, தீப தாளிச்சிறி, கெந்தகம், மரமஞ்சள், கஸ்தூரி மஞ்சள், வாய் விளங்கம் தேன் சேர்.க, நெய் சேர்.க, பால் சேர்.க, குயபுரி சர்க்கரை சேர்.க, இந்த வகை ஒன்றுக்கு விராகனெடை.உ, இது வெல்லாம் லேகம் பண்ணுவது மருந்து. பதினாறு வயதுக்கு தொட்டிலும் பிள்ளையுமாகும். இதுக்கு பத்தியம் பால், நெய், சர்க்கரை, மாங்கிழங்கும் ஆங்காரமான சாப்பாடு சாப்பிடவும்.

சூலைக் கட்டுக்கு மருந்து :-

கையும் காலும் முடங்கின பிடிப்புக்கு செங்கீரை கொண்டு வந்து தலையை இடிச்சு பசறு பசறு உழக்கு. இதுக்கு கடைச் சரக்கு மிளகு விராகனெடை.ங, சித்திரமூலம் விராகனெடை.உ, செவியம் விராகனெடை.க, லவுங்கம் விராகனெடை.௭, சாதிக்காய் விராகனெடை.க, கஸ்தூரி மஞ்சள் விராகனெடை.க, ஜாதவளை விராகனெடை.க அமச்சி ஒரு பொடி விராகனெடை. இது வெல்லாம் பொடி செய்து உள்ளுக்கு பசறுலே இரண்டு விராகனெடை போட்டு மூன்று நாள் குடிக்கவும். அந்தசெங்கீரைத் தண்டு இடித்து இரண்டு பானையிலே போட்டு தண்ணீர் காய வைத்து உடம்புக்கு வார்க்கவும். சூலை கட்டுத் தீரும். இதுக்கு பத்தியம் வெந்நீருஞ் சோறும் சாப்பிடவும். இப்படி மூன்று நாள் குடிக்கவும்.

இருமலுக்கு உப்பு சத்துக்கு மருந்து :-

தேத்தான் கொட்டை சேர்.க, அம்பலேகடகம் பலம்.உ, தீகை நெல்லிப் பட்டை சேர்.க இது வெல்லாம் சூரணம் பண்ணி தேனில் சாப்பிடவும். இருமல் நிற்கும்.

பேய் நாய் கடிச்சால் மருந்து :- not useful

வெள்ளாட்டுப் பால் தண்ணி மிட்டான் கிழங்கு பாலிலே கலந்து உள்ளுக்கு கொடுக்க மூன்று நாள் மூன்று வேளை கொடுக்கவும். பேய் நாய் கடி தீரும். இதுக்கு பத்தியம் புளிப்பு தவிர்க்கவும்.

காட்டுப் பூசணி வேர் கொண்டு வந்து மேல் புறணி யெல்லாஞ் சீவிப் போட்டு பட்டையைச் சாந்தோடரைச்சு ஏழு திட்டு எடை உருண்டை பண்ணி சாமஞ் சோறு ஆக்கி வெந்த பிறகு சோத்துக் குள்ளே ஒரு குளிகையை வைத்து சோத்தை மூடி வெந்த பிறகு இறக்கிக் கொண்டு உப்பு போடாமல் அந்த சோறும் பசுவின் மோருஞ் சாப்பிடவும். இந்தப் பிரகாரம் ஏழு நாள் சாப்பிடவும். இதுக்கு பத்தியம் உப்பு, புளி தவிர்க்கவும்

வாதத்துக்கு மருந்து :-

அறுப்பது வருஷ முருங்க மரத்தை முழங்கால் உயரத்தில் வெட்டிப் போட்டு கீழே மரத்தை சுத்தி தோண்டி கீழே பெரிய வேர் வடக்கே போற வேரை நடுவே வெட்டி அதின் முகத்தில் குடுவை வைத்து மேலே ஒரு ஒடு மூடி அதின் மேலே எருமுட்டை முழங்கால் மட்டும் அடுக்கி நாளத்து * நன் * ஞாயற்றுக் கிழமை அன்றைக்கு அதிலே நெருப்பை வைக்கவும். வெந்த பிறகு அந்தக் குடுவையை எடுத்தால் தயிலத்திலே இரண்டு பலம் லவுங்கம் அந்தத் தயிலத்தில் ஊறப் போட்டு ஊறின பிறகு எடுத்து நாள் ஒன்றுக்கு மூன்று லவங்கஞ் சாப்பிடவும். இதுக்கு பத்தியம் நெய்யுஞ் சோறும் சாப்பிடவும்.

நேத்திர வாய்வுக்கு மருந்து :-

முலைப் பாலும் நாமத் தாமரை இரண்டுங் கசக்கி மூன்று நேரங் கண்ணிலே

புழியவும். நேத்திர வாய்வு தீரும். இதக்குப் பத்தியம் உப்பு, புளி தவிர்க்கவும்.

ரத்தல்_கழிச்சல்_நிறுத்த_மருந்து:-

இலவ மரத்தப் பிசின் கொண்டு வந்து அரைத்து தூட்டு எடை பிசிறுக்கு அரைத்து பசுவின் தயிரு துணியிலே முடிச்சுக் கட்டி தொங்கக் கட்டி தண்ணீர் வடிஞ்சு போன பிறகு அதை எடுத்து மூன்று விசைகையில் மூன்று கரந் தயிரின் கீழே பிசின் மேலே அதின் மேலே தயிரும் இந்தப் படி மூன்று நாள் சாப்பிடவும் ரத்தக் கழிச்சல் தீரும். பத்தியம் புளிப்பு தவிர்க்கவும். ~~இருமலுக்~~

இருமலுக்கு_மருந்து:-

ஆகாசத் தாமரை இலை.எ, மிளகு.எ, வெள்ளைப் பூண்டு பல்லு.எ, இது மூன்றும் அரைச்சு உருண்டை பண்ணி முழுங்கவும். இருமல் நிற்கும். இதக்கு பத்தியம் நெய், புளி தவிர்க்கவும்.

அள்ளு_மாந்தைக்கு_மருந்து:- #Incomplete

கடுகுரோகணி தூட்டுயெடை.க, வெள்ளைப் பூண்டு தூட்டுயெடை.க, வசம்பு தூட்டு யெடை.க, மிளகு தக்காணி.க, கருஞ்சீரகம் காசிடை.க, சாதிக்காய் தூட்டுயெடை.க, வறுத்த முத்து எண்ணை சேர்.க, இந்த வகை 6ம் பொடி செய்து எண்ணை ஆக்கிக் கொள்ளுவது.

இருமல்_உப்புசத்துக்கு_மருந்து:-

புங்கம் வேர் கொண்டு வந்து மேல் புறணி சீவி உள்ளுஞ் சோறு இழைச்சுக் கொண்டு உழக்கு கம்பரிசி யோடே சரி பாகம் போட்டு பனை வெல்லம் போட்டு இடிச்சு உருண்டை பண்ணி வைத்துக் கொண்டு தின்னவும். இருமல் உப்புசந் தீரும்.

இருமல்_உப்புசத்துக்கு_மருந்து:-

பறங்கிச் சக்கை சேர்.க, முருட்டிய மொக்கு பலம்.கவ, வாய் விளங்கம் பலம்.க, கண்டு பறங்கி பலம்.க, சாதிக்காய் பலம்.க, லவுங்கம் விராகனெடை.க, கஸ்தூரி மஞ்சள் பலம்., செருங் கொட்டை இருவது கற்த்தாட்டுப் பாலை, பனை வெல்லம் இதில் லேகம் பண்ணி வைத்துக் கொண்டு சாப்பிடவும். இருமல் உப்புசம் நிற்கும். புளி தவிர்க்கவும்.

மாலைக்_கண்ணுக்கு_மருந்து:-

பச்சரியும், மல்லிகைக் கொழுந்தும் இடிச்சு நெய் வார்த்துப் பிசைந்து தின்னவும். மாலை கண் தீரும். இதக்கு பத்தியம் பால் நெய் ஆகும்.

முட்டுக்_குட்டுக்கு_மருந்து:-

பழந் துணி சுட்டுக் கருக்குப் பண்ணி வறுத்த உப்பும் இது விராகனெடை.யஉ, கமுநீரிலரைத்துக் குடிக்கவும் நிற்கும். புங்கங் கொழுந்து பாக்களவு மூன்று நாள் விளக் கெண்ணெயில் குடிக்கவும்.

யவாச்சாரம், பெருங்காயம், சயிந்த லவணம், சரி பாகஞ் சுட்டி தேனில் கொடுக்கவும் தீரும். இதக்கு பத்தியம் கார்ப்பு, புளிப்பு தவிர்க்கவும்.

இருமலுக்கு_மருந்து:-

மூத்த பிரண்டை கொண்டு வந்து நாரு வாங்கிப் போட்டு பூனைக் காஞ்சொறி இலை தும்பருஷ்டகம் வெங்காரஞ் சுத்தி பண்ணிப் பொரிச்சுக் கொண்டு பச்சை மிளகாய்

புளியம் பழம் இதுக்குச் சரி உப்பு போட்டு அரைத்து உருண்டை பண்ணி களக்காய் பிரமாணம் உருண்டை கொடுக்கவும். இருமல் தீரும். இச்சா பத்தியம்.

<u>காசரோகத்துக்கு மருந்து</u>:-

கோதும்பை அரைச்சு மாவு படி. இதுக்கு அநுபானம் இலைக் கள்ளிப் பாலிலே பிசைந்து மூன்று நாள் ஊறின பிறகு அதை உடைத்து ஆற வைத்துப் பிறகு இலைக் கள்ளிச் சாத்தில் பிசைந்து மூன்று நாள் ஊறின பிறகு எடுத்து உடைத்து தெத்த நிழலிலே உலர்த்தி வைத்துக் கொண்டு நித்தம் விராகனெடை குடிக்கவும். இதுக்குப் பத்தியம் கார்ப்பு, புளிப்பு ஆகாது. காச ரோகந் தீரும்.

<u>வேகு செத்து வீரிய மில்லாத பேருக்கு</u>:-

Not useful

நொச்சி விரை பலம்.க, நீர்முள்ளி விரை பலம்.க, ஆவாரைப் பருப்பு பலம்.க, நிலப் பனைக் கிழங்கு பலம்.க, தொட்ட மாவுலி கிழங்கு பலம்.க, ஆனைக் காஞ்சொறி விரை பலம்.க, இதுக்கு கடைச் சரக்கு சாதிக்காய்.எ, சாதிபத்திரி பலம்.க, லவுங்கம் பலம்.க, இது வெல்லாம் பொடி செய்து வைத்துக் கொண்டு பசுவின் பால் ஒரு படி சிவக்கக் காய்ச்சி அதிலே இந்தப் பொடி எல்லாம் போட்டு பதமாக கிளறி மெழுகு பதத்தில் இறக்கி தேன் வார்த்துங் கிளறி நெல்லிக் காயளவு உருண்டை பண்ணி தின்னவும். வேண்டுமென்ன மோகம் அதிக லேபன முண்டாம்.

<u>ஆசனங் கண்ட மாலைக்கு மருந்து</u>:-

not clear

பாத்திரி யிடத்தில் ஒரு பலங் கொண்டு வந்து இதுக்கு அநுபானம் எருக்கம் பால் வார்த்து அரைத்து ஏழு நாளரைக்கவும். அதுக்குப் பிறகு உத்தாமணியின் சாறு வார்த்துக் கலந்து மேலே ஒரு சட்டி மூடி மண்ணுறு மெத்தி வெள்ளாட்டு எருவுக்குள்ளே வைத்து நெருப்பு போட்டு வெந்த பிறகு எடுத்து எருக்கம் பால் வார்த்து அரைத்து உருண்டையாய் செய்து களிமண் கொண்டு வந்து யின் லங்/குசவன் சட்டியிலே இருக்கிற குளம்புங் கொண்டு வந்து துணிக்குப் பிடிப்பிச்சு உருண்டை மேலே உத்தாமணி யிலையை மூடி அதுக்கு மேல் மண் பிடிப்பிச்சு துணியை சுத்தி அதின் மேலே மண் பூசி வெள்ளாட்டு எருவும் அரசம் விறகும் கலப்பாகக் கொட்டி அது நடுவே வைத்து மூடி நாலு புறமும் நெருப்பு போட்டு வெந்த பிறகு எடுத்துப் பார்த்தால் சாம்பலாம். அதை எடுத்து வைத்துக் கொண்டு நெல்லரிசி [illegible] மாதிரி கொடுக்கவும். ஆசனங் கண்ட மாலை தீரும். இதுக்கு பத்தியம் புழுங்கலரிசிச் சோறு புடிச்சு உண்ணவும். இப்படி பதி[illegible] நாள் தின்னவும். ஆசனங் கண்ட மாலை தீரும்.

<u>ஆசனங் கண்ட மாலைக்கு மருந்து சூரணம்</u>:-

Not useful

உத்தாமணி வேர் சேர்.க, வசம்பு சேர்.க இது இரண்டும் இடித்து சூரணம் பண்ணி உள்ளுக்கு கொடுக்கவும். இதுக்குப் புகை போடவும். ஆயிரங் கால் பூச்சி செம்மட்டையா யிருக்கிறதைப் பார்த்து இருபத்தைந்து முப்பத்தஞ்சு கொண்டு வந்து தலையை நசுக்கி உலரப் போட்டு சூரணம் பண்ணிக் கொண்டு முன் சூரணம்.உ, இந்த சூரணம்.க, இந்த பங்காக கலந்து கொஞ்சமாய் சான் குழி தோண்டி அந்தக் குழி யில் புளியஞ் செதில் போட்டு நெருப்பு போட்டு தணலாக்கி அதின் மேலே ஒரு சட்டி மூடி புகை போகாமல் சாணி பூசிச் சட்டிக்கு நடுவே சில்லியும் பக்கத்தில் ஒரு சில்லியும் ஒன்றுக்கு குழல் மத்தி ஒரு சில்லியில் நெருப்பு மேல் முன் சூரணந் தூவி ஆசனம் கண்டம் அதுக்குச் சரியாய் ஒக்கார வைத்து குழலில் ஊதவும்.

ஆசனங் கண்டத்தில் புகைப்பவும் இது தீரும். இது கை கண்டது. இதக்கு பத்தியம் உப்பு, புளி ஆகாது. கடும் பத்தியம். வென்னீருஞ் சோறும் சாப்பிடவும்.

பதினெட்டு வகை வலிப்புக்கு மருந்து:-

சங்கம் பட்டை பொடி சேர்.க, சித்திர மூலம் பொடி சேர்.க, எருக்கம் பட்டை தூள் சேர்.க, சாதிக் குங்குமப் பூ விராகனெடை.க, இதக்கு அநுபானம் வெள்ளாட்டுக் கோமியம் வள்ளம்.க, ஒரு சாதி விறகாக அம்பியிலே போட்டு எரி விட்டு உழக்காக காய்ச்சி அதிலே இந்தப் பொடியை ஒரு சட்டியிலே போட்டு அந்தக் கோமியத்தை வார்த்து கிளரிப் பிசைந்து நித்தம் களிஞ்சிக் காய்ப் பிரமாணம் தின்ன இரண்டு நேரமுந் தின்னவும். பதினெட்டு வலிப்புந் தீரும். இது கை கண்டது. இதக்குப் பத்தியம் புளிப்பு ஆகாது. பத்தியம் கால் மண்டலம் இருக்கவும். அதின் பிறகு இச்சா பத்தியம். நாற்பத்தஞ்சு நாள் தின்னவும். சகல வலிப்புந் தீரும்.

கட்டு மாத்திரை பண்ணும் வகை:-

சாதிக்காய் விராகனெடை.க, சாபத்திரி விராகனெடை.க, லவுங்கம் விராகனெடை.க, தாளிச பத்திரி விராகனெடை.க, குரோசாணி ஓமம் விராகனெடை.க, ஓமம் விராகனெடை.க, அபினி மருந்து விராகனெடை.க, இதக்கு அநுபானம் சம்பு நாகயிலையும் ஆலாயிலையும் இரண்டும் கசாயம் போட்டு இந்தக் கசாயம் வார்த்த ரைத்து மாதளங் கொண்டு வந்து பிளந்து விரையைப் பெருக்கிப் போட்டு அதக்குள்ளே அந்த மருந்தை அரைச்சு அந்தக் காய்க்குள் வைத்து செம்மண் துணி சுத்தி செம்மண் பூசிப் புடம் போட்டு எடுத்து அரைத்து சுண்டைக்காய் பிரமாணங் குளிகை பண்ணி கீழும் மேலும் தயிர் வைத்து கொடுக்கவும். இதக்கு பத்தியம் தயிருஞ் சோறும் இடவும். சகல கிறுணியுந் தீரும். ஆரோக்கிய நமஸ்து.

சூலை நோவுக்கு மருந்து:-

எருக்கம் பூவு முசிளரைத்து மிளகு விராகனெடை.4 மஞ்சள் சத்தூ வசம்பு பூண்டு இது வெல்லாங் கூடப் போட்டு அரைத்து குளிகை பண்ணிக் கொடுக்க சூலை நோவு தீரும்.

சூலை எரிச்சலுக்கு மருந்து:-

கருப்புத் துணி சுட்டுக் கொண்டு அதிலே மிளகு பொடி செய்து போட்டு நெய்யில் குழைத்து கொடுக்கவும். மூள்ளி வேரும் சீரகம் சர்க்கரை வென்னீரில் கொடுக்கவும். சூலை நோவு தீரும்.

பிள்ளை தோஷத்துக்கு:-

உச்சியுடனே கண் குளிரும். முலை யுண்ணாது. பச்சை நிறமாய் வயிரோடும் பாலை சூரலா சீரி அழும். உச்சி குவிந்திருக்கும். தண்ணீர் தாகமே யெப்பொழுதும் அடிக்கும். கச்சணிந்த முலையாளே காண பிள்ளை தோஷம் கேள்க்க-

இதக்கு மருந்து:-

விடத் தேர், வடக்கே போற வேர் பிடிங்கி வந்து கோழிப் பலி கொடுத்து பிடிங்கி வந்து மோதிர வளையமாகச் சுத்தி சுடு காட்டில் நீறங் காம்பு பிடிங்கி

மோதிர வளையமாகக் குளிசங் கட்டவும். தாய் முலையில் வாய் வைக்கும் சத்தே யுண்ணும் மருவிக்கும். தெயா நிற்கும். மெல்லெகம்பும் குடுக்கிட்டிட்டை வயறெடுக்கு தாயா வண்ணங் கட்டுரைத்த கதை நால் வழியே சொன்னோம். நரம்பே யோகங் கண்டடோ அல்ல குளிசபே.

வண்ணத்தில் வெருவாய் போசாமல் கொண்டு வந்து பட்டை எடுத்து சிறு நாறத்தை தன்னறத்தை காய் மரியாதி அரைத்து கோழி முட்டை வெள்ளை கரு வெடுத்துக் கொண்டு பன்னிரை வார்த்தரைத்து அடை சுட்டுத் தின்ன நீங்கும். விலங்கு முறிக்கவும்.

சீதாதேவி செங்கள நீர் வேரும் இலையுங் கள்ளி வேரு இலையும் தி விரையுங் கூட்டி உலர்த்தி பொடி செய்து ஆணியிலிட விலங்கு முறியும்.

தொடிக்க:- கரும் பூனையை பிடித்து வந்து மூன்று நாள் கட்டி வைத்து பழைய அரிசியும் வெல்லமும் தும்பைப் பூவுங் கூட்டி பால் சோறுக்கி அந்த சோத்துக்குள்ளே காசிடை வெள்ளியுங் கூட்டி அந்தப் பூனை தின்னால் அந்தப் பூனை எச்சத்தில் விழும். அந்த வெள்ளியை மோதிரமாகத் தட்டி -மேல் (ஊக ஏடுகள் இல்லை)

வாத பித்த சேத்துமம் பித்தத்துக்கு மருந்து:-

நாலு கடுக்காய் பொடி செய்து சர்க்கரை கூட்டி எண்ணெயில் முழுங்க வாதந் தீரும்.

நாலு கடுக்காய் பொடி செய்து நெய்யில் முழுங்க பித்தந் தீரும். ஐந்து கடுக்காய் பொடி செய்து திப்பிலி கூட்டி முழுங்கச் சேத்துமந் தீரும்.

மூலக் கிருணிக்கு மூல வாய்வுக்கு கோழிக் குழம்பு:-

மெருகங் கிழங்கு ஒரு கொட்டைப் பாக்களவு அரைத்து அதை சுண்டைக்காயளவு உருட்டி வெண்ணெயில் பொதிந்து பத்து நாள் முழுங்கவும். இரண்டு தரம் பேதியாகும். உள்மூலங் கரைந்து விழும்.

மூல வாய்வுக்கு:-

சித்தாமணக் கெண்ணெ மாணம். 1/2 திருகு கள்ளிப் பால் மாணம். 1/2 இவை வேக வைத்து வடித்துக் குடிக்க மூல ரோகம் புலம்புந் தீரும்.

கோழி கற்பம்:-

சாறணை வேர், புள்ளடி குருந்த வேர். உகாய் வேர், கொடிவேலி வேர், மாவிலிங்கம் வேர், மணிப்பிடை வேர், அமுக்கரா வேர், பிறண்டை வேர் எருக்கம் வேர் கார் போக அரிசி இரதங் கடுகுரோகணி சுக்கு வெள்ளை வெங்காயம் கருஞ்சீரகம், நேர்வாளம் இவை யெல்லாம் வெள்ளாட்டு நீரிலரைத்து குடிக்கவும்.

கண் வியாதி படலம், காசஞ் சதை படலம், கண் புகைச்சல் குளிகை:-

சுக்கு, மிளகு, திப்பிலி, புங்க விரை, மஞ்சள், இந்துப்பு, வில்வப் பத்திரி பழம், அளசி வேர், மத்தூர பளம் இவை சரியாக எலுமிச்சம் பழ சாறு வார்த்தரைத்து உருண்டை பண்ணி கண்ணிலிட குமர படலம் காசம், உதசம் எலிக்கம் தோஉதம் பூத பிசாசுக்கு எலுமிச்சம் பழச் சாத்திலிடவும்.

பித்தத்துக்கு பைத்தியத்துக்கு மருந்து:-

மதுரம் ஒன்று பணவெடை, பொடி செய்து முருங்கைப் பூ ஒரு பிடி நெய்யில் வேக வைத்து பூவு சிவந்தவுடன் பொடி சேரத் தூவி இறக்கி அந்தப் பூவை --ல் போட்டு

அந்தப் பொடி போட்டு நாசியில் நசியம் பண்ணவும்.

----------க்கு மருந்து :- *Incomplete*

நல்லெண்ணை வெத்திலைச் சாறு, முருங்கையிலைச் சாறு, மிளகு மாணம் உலர்ந்த --- கருஞ்சீரகம், ஏலம், லவுங்கம், பச்சிலை கச்சோலம் மடைலிறக்கச் சோலம் கறண்டி எண்ணை ஒரொன்று பூ வண்டை அரைத்து கலந்து வெந்து வடித்து முழுங்க பித்தம் நாற்பது நீர்ப் பாச்சல், கண் புகைச்சல், கண்ணோவு, தலை நோவு தேங்காய் நெய்யில் நாசியில் நிறுத்தவும். வெப்பம் புண்ணுக்கு அவுரி வேர் பட்டை அரைத்துசீலை யிலொட்டி திரி பண்ணி நாசியில் புகை ஏத்தவும்.

பீநசிக்கு மருந்து :-

அவுரி வேர், வேப்ப முத்து தும்பை வேர், மஞ்சள் குங்கிலியம் கஸ்தூரி மஞ்சள், இவை எண்ணையி லெரித்து தலையில் வார்த்துக் கட்டி நாலு நாள் முழுகவும்.

வேறு.

தும்பை ரசம், சந்தனத்துடன் அரைத்து நசிய மிடுக்கம் பல் பிணி தீரும்.

வேறு

எண்ணை நாழி பசுவின் பால் நாழி எலுமிச்சம் பழம். மிளகு அரைத்துக் கலந்து வேக வைத்து வடித்துத் தலை முழுகத் தீரும்.

பீநசி வேறு :- *Not clear* *Incomplete*

நெல்லிக்காய்ச் சாறு, வெள்ளாட்டுப் பால் நல்லெண்ணை நாழி, அதிமதுரம் பலம்.க, இவை வேக வைத்து தலைக்கு வார்த்து முழுகவும். பசுவின் பால் உழக்கு கஸ்தூரி குங்குமப் பூ அறுகம் வேர், மாதளை முகிள் அரிசி சுக்கு, மிளகு, கோஷ்டம், அதிமதுரம், திருகு கள்ளி வேர் அரைத்து சீலையிலொட்டி உலர்த்தி பூவரசு வேர் படி இடித்து உலர்த்தி உரலில் படியா யிடித்து பின்பு இது யிரதம் பலம்.க, பாசாணம் ஐந்து பணவெடை கெந்தகம் பணவெடை.வ, இது இரண்டு நாளுற ஊறி அபாட்டு பன்னி ரெண்டு நாள் முழுக மண்டை குலை தீரும். ம

மண்டை வியாதிக்கு மருந்து :-

நீரடி முத்து சேர்.யஅ, உடைச்சு பருப்பு பண்ணிக் கொண்டு உரலிலே இடிச்சுக் கொண்டு அதுக்கான இளநீரில் உலை வைத்து அதிலே கரைச்சு அடுப்பிலே வைத்து எரிவிட்டு வெந்த பதத்தில் வடித்துக் கொண்டு இதுக்கு கடைச் சரக்கு நெல்லிக்காய்க் கெந்தகம் சேர் மூன்றும் பொடி பண்ணி வெள்ளைச் சீலையில் தூவி மூன்று திரியாக சுரட்டி இதுக்கு எருமையோடே மேயாமலிருக்கிற பசுவின் (பால்) சேர் மூன்றுங் கொண்டு வந்து இந்த மூன்று திரியும் சுவரிலே இருப்பு சலாகை பண்ணி அடிச்சு அந்த சலாகை யிலே திரியைத் தொங்க குத்தி அதுக்கு எரி கொளுத்தி அது மேலே திரிக் கொரு சேர் நெய் வார்த்து (மேல் முடிவுக்கு ஊஉஎ ஏடு இல்லை) (ஊஉஎ) முதல் இல்லை)

புங்கு சங்கங் குப்பி இதுகள் ரசம் வாங்கி இதுக்கு கடைச் சரக்கு கண்டு பறங்கி பலம். , திப்பிலி பலம். , தெசாவரம் பலம். , ஓமம் பலம். , வெள்ளுள்ளி பலம். , கடுகுரோகணி பலம். , மிளகு பலம். , பெருங்காயம் பலம். மஞ்சள் பலம். , பட்டை வகையில் பண்ணின தயிலத்தில் ஐந்து வகை எண்ணை இலுப்பை எண்ணை சேர்.க, நல்லெண்ணை சேர்.கஉ விளக்கெண்ணை சேர்.க, புங்கெண்ணை சேர்.க, ஆக

Incomplete

இந்த வகை எண்ணை வார்த்து காய்ச்சி இந்த வகை ஒன்றுக்கு உமக்கு சாறு வார்த்து காய்ச்சி ரண வகை ஒன்றுக்கு பலம்.க, போட்டு காய்ச்சி பதத்தி லெடுக்கவும். மேலுக்குப் பிடிக்கவும் தீரும்.

இருவாய் கட்டிய சுரத்துக்கு மருந்து:-

சுக்கு, மிளகு, குரோசாணி, ஓமம், இந்துப்பு, வாய் விளங்கம், ஓமம் இந்த வகை ஆறும் மருந்து ஆறு விராகனெடை நேர்வாளம் பருப்பு வாங்கி இரண்டு விராக னெடை, வெள்ளைக் காக்கணம் வேர் பன்னிரெண்டு விராகனெடை எலுமிச்சம் பழச் சாறு வார்த்து அரைத்து சுண்டை கடலை மாதிரி குளிகை பண்ணி இருவாய் கட்டிய சுரத் துக்கு இள வென்னீரில் க்கு அரைத்து வெல்லத்துடன் மத்திச்சு கொடுக்க வெல்லத் தில் கொடுக்கவும் விரோசனமாம்.

உள் மூலத்துக்கு பிற மூலத்துக்கு மருந்து:-

கருஞ் செம்பைக் கிழங்கும், கருங் குறுவை நெல்லரிசியும் இரண்டும் இடித்துக் களிக் கிண்டி நல்லெண்ணை வார்த்து பச்சரிசி இடித்த மாவும் சாறும் ஒன்றாக பிசறி மூடி வெத்து சோறு பானையில் போட்டு வேக கட்டி தண்ணீர் விட்டுக் காய்ச்சி அரிசி மாவும் சுட்டு மூன்று பிடி தின்ன மூலம் விழும்.

ரத்தப் பிரமியத்துக்கு:-

பலாக்காய் எலுமிச்சங் காய், சந்தண மரைச்சு சிறங்கை நல்லெண்ணை யுங் கலந்து மூன்று நாள் ஆறு பொழுது தின்னத் தீரும். கழுதைத் தும்பை காடியில் குடிக்கத் தீரும். குடல் வாதந் தீரும்.

மேல் வாதத்துக்கும் கிருணிக்கும் மருந்து:-

கிருணிக்கு:- குப்பை மேனியிலையும், மஞ்சளும் ஒத்த லைப் பூண்டும் வசம்பு சமனாக அ ரைத்து மெல்லிய சீலையில் பிடித்து வேண்டுமென்ற போது விழுங்குறதுக்கும் மாறமாக மூக்கில் சிறு நீரில் நசியம் விடவும்.

வாதத்துக்கு மருந்து:-

நிலப்பனை வேர், கீழா நெல்லி வேர், ஆடாதோடை வேர், புளியருணை வேர், சித்தா முட்டி வேர், பாப்பார முள்ளி வேர், விஷக் காந்தி வேர், ஆயில் பட்டை கொடி வேலி வேர், திப்பிலி, க்கு, தும்பருஷ்டகம், செவியம் கண்டு பறங்கி, குரோ சாணி ஓமம், அதிமதுரம், அக்கலாக் காரம் கோஷ்டம், திப்பிலி மூலம், சாதிக் காய், சாதிப்பத்திரி, லவுங்கப் பட்டை, லவுங்கப் பத்திரி இது வகை யெல்லாம் இடித்துச் சூரணம் பண்ணித் தேன் வார்த்து கூட்டித் தின்கவும். இதுக்குப் பத்தியம் புழுங் கலரிசி, துவரம் பருப்பு, அரைக்கீரை ஆகும்.

சிறு பிள்ளைகளுக்கு மருந்து:-

இரைப்பு, மாந்தை, சொருகு மாந்தை, சுரமாந்தை, ஓடு மாந்தை, கழிச்சல் மாந்தை, நமங்கிரி மாந்தை, பதினெட்டு மாந்தைக்கு மருந்து:- இதுக்கு மாந்தை என்றறியவும். பெரும் பாவட்டையிலை ஒரு பிடி, குத்தெ தழை பிடி.க, சுண்டை தழை பிடி.க, கொடை முள்ளங்கி பிடி.க, உத்தாமணி பிடி.க, குப்பை மேன்னி பிடி இலை பிடி.க, நல்ல சுரையிலை பிடி.க, பாக பாலை பிடி.க, பொடுதலை பிடி.க, ஆக வகை ஒன்பதும் அது வெல்லாம் சமனாக பிடித்து ஒரு சட்டியில் போட்டு ஒரு

செம்பு தண்ணீர் வார்த்து அடுப்பு மேல் வைத்து ஒரு விறகாய் எரி விட்டு அரை சேர் தண்ணீராக சுண்டப் பார்த்து இறக்கி வைத்து ஆறின பிற்பாடு தலையைப் பிரிஞ்சு கொண்டு அந்தக் கஷாயத்தியல் கடைச் சிலவு வகை தானிக்காய் விராகனெடை.க, நெல்லிக்காய் காசெடை.க, வாய் விளங்கம் காசெடை.க, ஓமம் விராகனெடை.க, மோடி விராகனெடை.க, திப்பிலி விராகனெடை.க, லவுங்கப் பட்டை விராகனெடை.க, லவுங்கப் பூ விராகனெடை.க, சாதிக்காய் விராகனெடை.க, சாபத்திரி விராகனெடை.க, தாளிச பத்திரி விராகனெடை.க, சடாமாங்கிஷம் விராகனெடை.க, பறங்கிச் சக்கை விராகனெடை.க, தம்புருஷ்டகம் விராகனெடை.க, கடுக்காய் விராகனெடை.க, கொத்தமல்லி விராகனெடை.க, அதிமதுரம் விராகனெடை.க, சுக்கு விராகனெடை.க, மிளகு விராகனெடை.க, பெருங்காயம் விராகனெடை.க, அக்கலாக் காரம் விராகனெடை.க, கோஷ்டம் விராகனெடை.க, கடுகு விராகனெடை.க, கடுகுரோகணி விராகனெடை.க, குரோசாணி, ஓமம் விராகனெடை.க, சீரகம் விராகனெடை.க, கருஞ்சீரகம் விராகனெடை.க, ஏலம் விராகனெடை.க, வெள்ளைப் பூண்டு விராகனெடை.க, செவியம் விராகனெடை.க, கஸ்தூரி மஞ்சள் விராகனெடை.க, கசகசா விராகனெடை.க, கண்டு பறங்கி விராகனெடை.க, இந்த வகை யெல்லாம் பசுவின் வெண்ணெயில் திமித்தி பொன்னிறமாய் வறுத்துக் கொண்டு சிறசா யிருக்கிற சரக்கு பசு வெண்ணெயில் திமித்தி வேறே வறுத்துக் கொண்டு அம்மியில் வைத்து ஒரு சாமம் மரைத்து குண்டு மணிப் பிரமாணம் உருண்டை பண்ணி நிழலுலர்த்தி மத்தா நாள்வெய்யிலுலர்த்தி மூலைப் பாலில் உருண்டை ஒன்று குழப்பி கொடுக்கவும். பதினெட்டு மாந்தை கணத்துக்கு கொடுத்தால் குணமாம். இதுக்கு பத்தியம் புங்குலரிசி சோறு, துவரை துவரம் பருப்பு, சாறு ஆறிய களி ஆகும்.

<u>பாரிச வாய்வுக்கு மருந்து</u>:-

வனமூலிகை வேர் வைக புணவி கொடி வடக்கே போற வேர் வெட்டி வந்து ஒவ்வொரு நாளு விரக்கடை தரிச்சுக் கொள்ளவும். கறுத்தாட்டுப் பால் கொண்டு வந்து சேர் பாலில் அந்த வேரை நசுக்கி அந்தப் பாலில் போட்டு பிசைந்து சீக்கிரமாய் எறிந்து தொவையறத்துக்கு முன்னே சாப்பிடவும். இதுக்கு பத்தியம் புழுங்கலரிசி சோறு உப்பு வறுத்துப் போட்டுக் கொள்ளவும். அவரைப் பருப்பு வறுத்தப் உப்புப் போட்டது சாதத் தோடே சாப்பிடலாம். மூன்று நாள் சாப்பிட பாரிச வாய்வு தீரும்.

அண்ட வாய்வுங் குணம் எப்படி என்றுல்:- கீழ் இடுப்பு ரேக மெல்லாம் துளைக்கும். பருத்த தாவு விட்டு எழாமல் விழுந்திருக்கும்.

<u>அதுக்கு மருந்து</u>:-

பேரெள்ளு எண்ணை சேர்.க, தினம் ஒன்றும் எண்ணை சேர் பாவு பச்சை தண்ணீர் சேர் பாவு நல்ல இலுப்பைக் கொழுந்து ஒரு குத்து அரைச்சு மை ஆட்டம் அரைத்து இது மூன்றுங் கலந்து சாப்பிடவும் இதுக்கு பத்தியம். மூன்று நாள் சாப்பிட்ட பிற்பாடு மத்த நாள் முரி நெல்லுங் கொண்டு வந்து காசிடை சாறு நல்லெண்ணை ஒரு காசிடை இது இரண்டும் மூன்று நாள் சாப்பிடவும். ஏழாம் நாளைக்கு பத்தியம் முறிக்கவும். இதுக்கு கெலுப்பு பண்டம் ஆகாது. ஒன்பதாம் நாளைக்கு தலைக்குத் தண்ணீர் வார்க்கவும். அந்த நல்லெண்ணை ஒரு காசெடை முரி நெல்லி பசறு காசு எடை தலைக்குத் தேய்த்து வார்த்துக் கொள்ளவும். (ஏங . ஏஙஏ ஏடுகள் இல்லை)

வாத பித்த தாப சுரத்துக்கு மருந்து :-

சீந்தில் தண்டு கொண்டு வந்து விரல் அளவு பிரமாணம் ஐந்து கருணை ஆக்கி திரிச்சுக் கொண்டு மேல் புறணி பசறு எந்த மட்டு இருக்குதோ அந்த மட்டுத்குத் தள்ளிப் போட்டு வெள்ளையா யிருக்கிறதை எடுத்துக் கொண்டு நெருப்பிலே போட்டு எடுத்துக் கொள்ளவும். கோரைக் கிழங்கும் அதுவும் நெருப்பிலே போட்டு அந்த மசற எல்லாந் தீச்சுப் போடவும். இது இரண்டும் நிலவேம்பும் பல. பாடகம் சுக்கு இது ஐந்தும் நசுக்கி கசாயம் போட்டு கொடுக்கவும். தாப சுரம், வாத பித்த சுரம் தீரு

சிறு பிள்ளைகளுக்கு சுக்கு சீதக் கட்டு விழுந்தால் ரத்தங் காண்பிக்கும். மருந்து :-

செம்பருத்தி ஐந்து பிஞ்சுக் காய் கொண்டு வந்து அம்மி மேலே வைத்து களிப் பாக்கு காசுக் கட்டியும் சீரகம் விராகனெடை.க, போட்டு சாந்து போலே அரைத்து தயிராகிலும் வென்னீராகிலும் குழப்பிக் கொடுக்க. இப்படி மூன்று நாள் கொடுக்க ரத்தம், சீதம் நின்று போம். இதுக்கு பத்தியம் புளி விடவும்.

பெரும்பாடு, சுத்து பிரிந்த கலைக்கு பிளவைக்கு, ஊது காமாலைக்கு மருந்து :-

தாழை விழுது கொண்டு வந்து மேல் புறணி சீவிப் போட்டு கும்பியில் நசுந்தி வெதுப்பின் சாறு பிழிஞ்சு நல்ல வெல்லம் போட்டுக் குடிக்கவும். பெரும் பாடு தீரும்.

தணவிலைக்கு எட்டிப் பழத்தின் கருஞ் சதை வாங்கி பசுவின் வெண்ணெயில் சாரித்து ஒரு நாளைக்கு மூன்று நேரம் விடவும்.

ஊது காமாலைக்கு நிலாவரை சமூலம் கொண்டு வந்து அவைச்சு தண்ணீர் வார்த்துப் பிசைந்து வடித்து இரண்டு படி மோரு கூட்டி ஆறின மாவில் பிசைந்து கூழக்கி உப்பிடாமல் உண்ணவும்.

ஆண் கட்டுக்கு மருந்து :-

புன் முருங்கை வேர் பட்டை அரைத்து சர்க்கரை போட்டு பசுவின் பாலில் கொடுக்க விடும். மர வட்டையை நெய்யில் கொதிக்க வைத்து வார்த்து தண்ணீர் விடும்.

எலி கடிக்கு மருந்து :-

முருங்கை வேரும் இந்துப்பும் சல உலர்த்திப் பொடி பண்ணி எண்ணெயில் குழைத்து முழுங்க எலி கடி தீரும்.

பிள்ளை பெற மாட்டாதவளுக்கு மாசு விழ மாட்டாதவளுக்கு :-

சிறு பிள்ளைகள் சிறுநீரில் ஒரு பனை வெல்லம் ஆறு எலுமிச்சம் பழம் சாறுங் கலந்து குடிக்கவும் மாசு விழும்.

மருந்து :-

ஆடு தின்னாப் பாளை நாற முதல் பிடுங்கி வந்து கட்டிலும் தலை கீழ தூக்கி வைக்கவும்.

கை கால் முடங்கினதுககு மருந்து :- கம்பரிசி பிடித்து களி கிளறி பசுவின் நெய் வார்த்து உண்ணவும்.

சுருட்டை பாம்பு கடிக்கு மருந்து :- கடித்த வாயை பிளக்கிப் போட்டு காவாளை மென்று வைத்துக் கட்டவும் விஷந் தீரும்.

கொரி நோவுக்கு மருந்து :- புங்கங் கொழுந்து பிடி. இரண்டு, எள்ளு ஒரு பிடி நல்ல வெல்லம் இரண்டு போட்டு இடித்துக் கொண்டு கோழி கூவுகிற நேரம் நடு வீடு

சார்ந்த உலக்கையை உதைச்சுக் கொண்டு ஒரு விளாங்காய் மாதிரி வெண்ணெயில் பிறட்டி மூன்று நாள் பத்தியம் பாலும் சோறும். உப்பு புளி தவிர்க்கவும்.

அற்புத_வாதத்துக்கு_மருந்து :-

ஆயில் பட்டை மேல் புறணி சீவிப் போட்டு கருக்கி நல்லெண்ணெயில் உலரப் போட்டு வசம்பு வெள்ளைப் பூண்டு போட்டு வெய்யிலில் வைத்து உள்ளுக்குக் கொண்டு மேலுக்குத் தடவவும். விஷபாகந் தீரும்.

சிறு குமிளாப் பட்டை, மிளகு ஊணப் பட்டை, புலி கடங்கிப் பட்டை, செங் கத்தாரிப் பட்டை, குட்டிப்பிராய் பட்டை, கடைச் சரக்கு சீரகம், பெருங்காயம், சுக்கு, மிளகு, வெள்ளைப் பூண்டு இந்த மருந்துகளை வகையாய் அரைச்சு வெள்ளாட்டுக் கோமியம் வெள்ளாட்டுப் பாலும் குறுவரகு அரிசியும் உவியில் பண்ணிக் கொள்ளவும்.

வயிற்று_வலிக்கு_மருந்து :-

கழுதை விட்டை சாறு நாழி, செம்பை சாறு நாழி, திவிளக்கெண்ணெ நாழி, நெய் நாழி இதுகூட்டி ஆக்கி மெழுகு பதத்தில் தருவாயிறக்கவும். உள்ளி வசம்பு சாதவளை சமூலங் கொண்டு வந்து உலர்த்திப் பொடி செய்து சோதித்துக் கொண்டு இப்பொடி பசுவின் வெண்ணெயில் குழைத்து முழுங்க வயத்தி - முடிவு (ஏடுகள் இல்லை)

நெல்லிக்காய்_பற்பம் :-

not complete

not useful

மாசி மாத்தையில் நெல்லிக்காய் கொண்டு வந்து ~~இறு~~ புரசம் பட்டை கொண்டு வந்து குருக நறுக்கி உரலில் போட்டு இடித்து ஒரு முடாவில் விட்டு அதின் மேலே நெல்லிக்காய் போட்டு இந்தப் பொடி பொறசம் பொடியும் நெல்லிக்காயும் அடுக்கு அடுக்காய் வைத் நிறை அடுக்கி அதின் மேலே ஒரு பானையிட்டு மூடி வேக வைத்து வெந்த வாறே இறக்கி விரை வாங்கிப் போட்டு நிழலில் உலர்த்தி இடித்து வஸ்திர காயம் பண்ணிப் போடவும். காலமே பசுவின் நெய்யும் தேன் நெய்யும் இப்படி ஒரு மாதங் சிகள் கொள்ள சற்பத்துக்குள்ள மோக முண்டாம். கெற்பத்திலே தரிக்கும் மதியுண்டாம். ஒரு வருஷம் கொண்டால் பதினறு பிள்ளையாவான். சுளியுண்டாம். ஆவிச்ச முண்டாம். நெல்லிக்காய்ச் சாறு மூன்று நாழியும் அரப் பொடி ஆற் பலமும் இரதம் அரைப் பலமும் ஆக இந்த பொடியும் இரதம் இந்தச் சாத்தில் ஒரு பானையில் போட்டு மூடி செம் மண்குள்ளே (முடிவில்லை)

பாரிச_வாய்வு_சன்னிக்கு_மருந்து :-

காட்டு முருங்கைப் பட்டை வெள்ளை வெங்காயம் வசம்புழி பெருங்காயம், சித்த மணக் கெண்ணெ ஒரு படி ஆக்கி உண்ணவும்.

சர்வ_வியாதிக்கு_சூரணம் :-

வில்வப் பிஞ்சு, அசமதகம் கொடி வேலி வேர் கூவும் பெருங்காயம், தீ அதி விடையம், ஆனை காவாளை செவியந் திப்பிலி, மெழுள்ளி, சீரகம், பஞ்ச லவணம், பாற விந்தம், காயம், திரிகடுகு, கடுகுரோகணி, நாய் வேளை விரை, வெந்தயம் வசம்பு, வெட்பாலை அரிசி, கடுக்காய் தானிக்காய், இது வெல்லாம் சேர சரி சமானமா கூட்டி அண்ட வாதத்துக்கு நீரழிவு வியாதிக்கு ஆமணக் கெண்ணெயில் கொள்ள வென்னீர் தன்னீரில் களஞ்சி கொள்ள மூலம் காசி மூந்திய உஷ்சி குற்மம், சங்கு கிருணி

பெரும்பாடு வயித்தில் புழு, மடிவாத சூலை பாண்டுவ ரோகம் பலவகை சுவாசம் பீனுசி மகோதரம் பிறமியம் இருபது சர்வ சுரமும், தானவஞ்சியும் ஊதை சூலையும் உள்ளடை வாதமும் இவை யெல்லாம் சந்தன வெலங் கண்டக் சபிஞ்ச மோடி படும்.

நாலரன பேதிக்கு மருந்து :-

தேவசுரமி பட்டை, தாம்பூலத்தில் மாடையிடை கொடுத்தால் பேதியாம். கண்டின மாதுல் இமாருஞ் சாதம் சீரகம் கசாயம் சாப்பிடவும். மூல சுறமியும் அந்த பிறகாரம். நேர்வாளம் இரண்டு பலம். முருங்கை விரை நாலு பலம். நேர்வாளஞ் சுத்தி தோலுரிச்சு பசுவின் கோமியத்தில் பசுவின் சாணியுங் கூடப் போட்டு நேர்வாளம் போட்டு ராத்திரி, பகல் அறுபது நாழிகைக்கு பிறகு எடுத்து மூளை வாங்கிப் போட்டு உலர்த்தி அரைத்து இரண்டும் பொடி பண்ணி முத்தத் தேங்காய் கண் திறந்து தண்ணீர் வாங்கிப் போட்டு இந்த சூரணமதில் போட்டு இந்தச் சூரணத்தில் போட்டு சதிரக் கள்ளிப் பால் ஒரு சேர் கூட விட்டு முருங்கைக் கொம்பில் துவார மடைத்து கொடி வேலி வேர், சுண்டைக்காய் பிரமாணம், கருப்பு நீரில் கரைத்து குடிக்க உள் காச்சல் தீரும்.

வெள்ளை நெத்திக்கு அவிழ்தம்.

பேய்தும்மட்டி வேர், மணத்தக்காளி வேர், காக்கணம் வேர், உள்ளி வசம்பு கூட்டி எரித்து உள்ளுக்கு கொடுத்து தலையில் தேய்க்கத் தீரும். குண்டுமணியிலை அரைத்து பசுவின் நெய்யில் குழப்பி புண் வாயில் வைக்கத் தீரும்.

குரல் கெளிக்கைக்கு :-

உத்தம தாளியிலை பாக்கு, வெத்திலை ஒரு யிலை தின்ன குரல் கெளியாம். இதுக்கு பத்தியம் நீருஞ் சோறும் சாப்பிடவும்.

குடல் வத்தத்துக்கு உடம்பு தேறுவயத்துக்கு கிழமை :-

குடல் வாய்க்கு குடல் விழும். தண்டு சிவாருவி வேர் ஒரு பிடி கொண்டு செருங் கொட்டை நாலு கடுக்காய் நறுக்கி உலர்த்திப் பொடி செய்து நீரில் குடிக்கத் தீரும். பிராவேர் வடக்கே போற வேர், வெட்டி உலர்த்திப் பொடி செய்து பாலில் குடிக்க உடம்பு தேறும். இந்தப் பொடி மோரில் குடிக்க இளப்புத் தீரும். இந்தப் பொடி காடியில் குடிக்க இருமல் தீரும்.

விரோசனம் உள்ளுக்கு கொள்ள மருந்து :-

எலுமிச்சம் பழம் சாத்தில் நேர் வாளமடைத்து எருமை சாணியில் கட்டி புடம் பண்ணி மத்தா நாள் எடுத்து வந்து ஒரு தரம் கழிய வென்ருல் ஒரு தரம் தேங்காய் சூளில்*கரைத்து உடைத்து திருவி தன் பாலாக புழிஞ்சி பெரியவர்க்கு இரண்டு கொட்டையும் சின்ன பிள்ளைகளுக்கு ஒரு கொட்டையும் அரைத்து தேங்காய்ப் பாலில் கரைத்து காய்ச்சிக் கடுகா ஆன மிறகு எடுத்து தின்னவும் கழியம். பிறகு மோருஞ் சோறும் அசனம் பண்ணவும்.

முழங்கால் வாதத்துக்கு கால் முடங்கினதுக்கு மருந்து :-

செங்கத்தாரி கருஞ் சூரை ஒரு பிடி, தளையும் பூத்த அகத்தி வேரும், ஆவாரங் கொழுந்தும் காசுக் கட்டி கஸ்தூரி மஞ்சள் கருஞ்சீரகம், காசுக் கட்டி, அசமதாகம் வெள்ளைப் பூண்டு இவை யெல்லாங் கூட்டி அரைத்து வேப்பெண்ணையில் கொதிக்க வைத்து விடிய

இரண்டு காசிடை கொள்ளத் தீரும். பிறண்டை சமூலத்தோடே ஒரு பிடி, குப்பை மேனிக் கொழுந்து, சாறணை காவேளை கொழுந்து இந்த மூன்றும் மருந்தும் பொலியிட்டு பிடுங்கி வந்து பிறண்டை வேர் ஒரு பிடியுங் கூட்டி இடித்து சீலை வடி கட்டிக் கொண்டு --------- காமல் தெளித்து மூன்று உழக்குஞ் சாறு குடிக்கவும். எலிகடி மருந்திடு எல்லாந் தீரும்.

வாத சுர லட்சுணம் :-

கை கால் சந்து சந்தா குடைச்சல் எடுக்கும். அசங்கை பண்ணும். நித்திரை வராது. தீவனம் உண்டாகாது. இது செய்தால் வாத சுரம்.

இதுக்கு தாது நடக்கிற விண மறணம் அசங்கை மேல் அடைக்கலங் குருவி போல் குந்தி நடக்கும். இதுக்கு மருந்து

இதுக்கு மருந்து :-

ரசம் விராகனெடை.க, சுக்காய்ப் பொன் விராகனெடை.க, மனோசிலை விராகனெடை.க, கெந்தகம் விராகனெடை.க, இந்த நாலு வகையுஞ் சுத்தி பிரயோகம். ரசம் நீரில் முறிக்கவும். காக்காய்ப் பொன் தயிரிலூற சுத்தி. இந்தப் படி சுத்தியான பிறகு கூட்டு வர்க்கம். வெள்ளை வெங்காயம், பருப்பு, பலம். , வறுத்த மிளகு பலம்.வ, அனலிட்ட திப்பிலி பலம்.வ, தனல் போட்ட வெண்காரம் பணவெடை.உ, படிக்காரம் பணவெடை. இது வெல்லாம் எலுமிச்சந் சாறு வார்த்தரைத்து உழுந்து மாதிரி குளிகை பண்ணி இதுக்கு அனுபானம் சிறு குறிஞ்சா இலை நசுக்கி சாறு வாங்கி குளிகை ஒன்றுங் கூட்டிக் கொடுக்கவும். இதுக்கு பத்தியம் கடினம்.

நீர்க் கட்டுக்கு மருந்து :-

நெருஞ்சில் வேர் ஒரு பிடி இரண்டு படி தண்ணீர் வார்த்து இரண்டு எலுமிச்சம் பழச் சாறு அதிலே புளிஞ்சி மூன்று விராகனெடை. சர்க்கரை அதிலே போட்டு வெங்காரம் கழஞ்சி பொரிச்சுப் போட்டு கொடுக்கவும். இதுக்கு பத்தியம் புளி விடவும்.

தலை வெடிப்புக்கு மருந்து :-

எலிபாஷாணம் விராகனெடை.உ, பச்சை வெத்திலை உள, இஞ்சி சேர். , இது கொண்டு வந்து வெத்திலைச் சாறும் இஞ்சிச் சாறும் வார்த்து மூன்று நாள் அரைத்து மிளகு பிரமாணம் உருண்டை பண்ணி உலர்த்தி ஏழு நாள்.க உ பிறகாரம் ஏழு நாள் தின்க எட்டா நாளைக்கு வென்னீர் வைத்துத் தலை முழுவதும் வார்க்கவும். இதுக்கு பத்தியம் ஏழு நாள் உப்பு புளியில்லாமல் இருக்கவும். எட்டாம் நாளைக்கு தலை முழுகிற அன்றைக்கு கோழிக் கறியும் உப்புங் கூட்டவும். இந்தப் படி நாற்பது நாளைக்கு புளி, கைப்பு விடவும். மூன்று மாதம் நல்லெண்ணை பூசணிக்காய் விடவும்.

சீதள சன்னி சகல வியாதிக்கு மருந்து :-

சீதாங்க சன்னி லட்சணம் எப்படி என்றால் காலமே முகம் வீங்கும். மேல் மூச்சுந் தோன்றும். கை கால் அசந்து போம். அன்னந் தெரிச்சிக்கும். உடம்பு பாரமாயிருக்கும்.

இதுக்கு மருந்து :-

சோம நாத பெருங்காயம் பலம். , சுக்கு பலம்.க, வெள்ளைப் பூண்டு பலம்.க, மிளகு பலம்.க, கடுகு பலம்.உ, ஓமம் பலம்.உ, சாதிக்காய் பலம்.ரு, சாபத்திரி பலம்.[illegible], ஏலம் திப்பிலி பலம்.உ, சயிந்திய லவணம் பலம்.[illegible], அதிமதுரம்

பலம்.௩, லவுங்கம் பலம்.௨, லவுங்கப் பட்டை பலம்.௩, கோஷ்டம் பலம்.௩, பிறண்டை கற்பம் அரைப்படி ஒன்று இடிச்சு கா ளாக்கி படி மோரிலே கலந்து அதை வறுத்து அந்தக் கறுக்கு படி.௩, வேப்பம் பட்டை பலம்.௩ய முடிவு இல்லை. (ஏடுகள் இல்லை).

சன்னிக்கு மருந்து:

பூவரசம் பட்டை, வெப்பாலை பட்டை, புங்கம் பட்டை, நரிச்சிப் பட்டை, கொடி வேலி வேர், அவிச்ச கொள்ளு ஒரு படி தண்ணீர் வைத்து வேக வைத்து வேக விட்டு ஆழாக்கு தண்ணீர் இருக்க காய்ச்சிக் கொள்ளவும். மிளகு வார்த்தங் காச்சினதை வெண்ணை போட்டு தாளிச்சு இரண்டு வெங்காயம் பல்லு நறுக்கிப் போட்டு தாளிச்சு ஆக்கி கொடுக்கவும். மூன்று நேரம் பத்தியம் பச்சரிசி கஞ்சி குடிக்க உப்பு, புளி தவிர்க்கவும்.

கள்ளிப் பால் கள்ளிக் கொழுந்து தின்றவர்க்கு மருந்து:-

நாகமரத்து முத்தப் பட்டை கொண்டு வந்து உரலில் இடித்து காடியிலாவது வென்னீர் தண்ணீரில் கலக்கிப் பிசைந்து வடி கட்டி உள்ளுக்கு கொடுக்கவும். கறுக்கு

உப்பு சத்துக்கு:-

பிரமிப் பட்டை இடித்து கஸ்தூரிவின் கோமியத்தில் பிசைந்து வடி கட்டிக் கொண்டு பனை வெல்லங் காய்ச்சிக் கொண்டு வெறும் வயித்திலும் அந்திக்கும் விடிந்ததும் ஒன்பது நாள் குடிக்கவும். பத்தியம் உப்பு, புளி தவிர்க்கவும். புழுங்கலரிசி சோறு சாப்பிடவும். இதுக்கும் பிறகு கரிசிலாங் கண்ணி வேரோடே பிடிங்கி வந்த தழையெல்லாம் உருவிப் போட்டு ஒரு பிடி சுப்பளு-----ல் இடிச்சு புளிஞ்சு கொண்டு கலந்து வெறு வயித்தில் மூன்று நாள் குடிக்கவும். இதுக்கு பத்தியம் விடவும்.

கள்ளிப் பாலில் பேதிக்கு கொடுத்தால்:-

மஞ்சள் இடித்து தெள்ளிக் கொண்டு மூன்று விரல் கொண்டது மூன்று பிடி தின்னவும்.

வேக்காளத்துக்கு மருந்து:- இலுப்பைப் புண்ணாக்கு திப்பிலி சுக்கு, அம்பல்கூடகம், மிளகு வெள்ளைப் பூண்டு, ஓமம் இதுக்கு வனமூலிகை தும்பை வேளை குப்பை மேனி, மாமரத்து மசுறு கூண்டு அறுபானத்துக்கு மூக்கில் சிறு நீரில் நசியம் விடவும். விட்டு தலைக்கு தேய்ச்சு பிறகு தண்ணீர் வார்க்கவும்.

வெள்ளை சாட்டணை வேர். சாந்தேடரைடத்து இலுப்பை புண்ணாக்கு விராகனெடை.௧ எலுமிச்சம் பழச் சாத்திலரைத்து ஏழு நாள் நசியம் விடவும் வியாதி தீரும்.

பெரு மரத்துப் பட்டை தாயும் பிள்ளையும் கல்லை விட்டை ஓடுகிற தண்ணீர் தலை கீழா மொண்டு வந்து கரைச்சு உள்ளுக்கு கொடுக்க வியாதி தீரும்.

வலிப்புக்கு எட்டி அலரி தின்னவர்க்கு மருந்து:-

கோட்டு மறக்கால் வேர் கொண்டு வந்து அதை அரைத்து அதிலே வசம்பு மாடை எடை.௧, வெள்ளைப் பூ பலம்.௨, சிறுநீரில் விடவும். சுடிக்கைப் போடவும்.

மருந்து:- வெத்திலைச் சாறும் எண்ணெயுங் குடிக்கத் தீரும்.

அபினி மருந்து தின்னால்:- தண்ணீரிலே கல்லை உரைச்சு ஒரு படி தண்ணீரிலே கொடுத்தால் கொக்கு விடும். இது கை கண்டது.

சுக விரோசன மருந்து :-

கடுக்காய் ஊந்துமோர்ந்து பார்க்க: மடய வரிக் கடுக்காய் எடுத்து தில்லம் பாலில் ஊறப் போட்டு ஊறின பிறகு எடுத்து நிழலில் உலர்த்தி முகர்ந்து பார்க்க வயிறு விடும்.

வெறு மந்தில்லம் பால் கலசத்தில் வைத்து சுவறின பிறகு கட்டி வைத்துக் கொண்டு அந்த பாலில் இரண்டு காசெடை எடுத்து ஆறின பிறகு மல்லிகை அரும்பு எடுத்து தோய்த்து வைத்து மத்த நாள் காலமே பூவை செண்டாக கட்டி மொகர்ந்து பார்க்க ஒரு தரம் மொகர்ந்தால் ஒரு தரம் வயிறு விடும். பத்து தரம் மொகர்ந்தால் பத்து தரம் வயிறு விடும்.

வயிறு கழிய மருந்து :-

விரோசனம் உள்ளுக்கு கொள்ள மருந்து :-

எலுமிச்சம் பழம் சாத்தில் நேர் வாளமடைத்து எருமை சாணியில் கட்டி புடம் பண்ணி மத்தா நாள் எடுத்து வந்து ஒரு தரம் கழிய வென்டில் ஒரு தரம் தேங் காய் உடைச்சு திருவித் தன் பால் புழிஞ்சி பெரியவர்க்கு இரண்டு கொட்டையும் சின்னப் பிள்ளைகளுக்கு ஒரு கொட்டையும் அரைத்துத் தேங்காய்ப் பாலில் கரைத்து காய்ச்சி கடுகா றின பிறகு எடுத்து தின்கவும். கழியும். மோருஞ் சோறுஞ் சாப்பிடவும்.

படுவான் புண்ணுக்கு மருந்து :-

இலுப்பைப் பட்டையும் இலையும் செருப்படிக் குண்ணியிலையும் நறுக்கி இலுப்பை எண்ணெயி லெரித்து புண்ணில் தடவ புண் ஆறும்.

உள் மூலத்துக்கு :- பிற மூலத்துக்கு :-

பேய்ப் பீர்க்கு விரை நாழி, குண்டு மணி நாழியும், கடுகு நாழியும், வெங்கரரம் கழஞ்சு, சூரிய புடமாக வைத்து தயிலமாம். இந்தத் தயிலமும் எருக்கம் பாலும் குழைத்தி டவும். ..க்கு, மூலம் பிறத்மூலம் போம். (எ கஉ ஏடு முறிந்து சிதைந்துள்ளது).

சன்னிக்கு நசியம் :-

சீரகம்.ய, கோஷ்டம் பணவெடை.உ, அக்கலக் காரம் பணவெடை.உ, தம் பைப் பூவு நசியம் பண்ணவும். தம்பஷ்டகம் சத்ரு மிளகு.அ எருக்கம் கமை நாலு இது வெல்லாம் கூட்டி சாட்டமுனைச் சாறு வார்த்து லவுங்கஞ் செண்பகப்பூ துவரம் பருப்பு, மிளகு உரைத்து கண்ணுக்கு அஞ்சனமிடவும். சன்னி முறியும்.

இதுக்கு கசாயம் :-

எட்டு வகை வனமூலிகை சிட்டா முட்டி வேர், பேரமுட்டி வேர், சமூலமும் நன்னாரி சமூலமும் மிளகறணை வேர், விசிறி வேர், பாப்பாற முள்ளி வேர், நீலி வேர், இது வகைக்கு பலம். கடைச் சரக்கு திப்பிலி மூலம் பலம்.வ, தம்ப ஷ்டகம் பலம்.வ, செவியம் பலம்.வ, சித்திர மூலம் பலம்.வ, லவுங்கப் பத்திரி பலம்.வ, லவுங்கப் பட்டை பலம்.வ, கொத்த மல்லி பலம்.வ, வாய்விளங்கம் பலம்.வ, கண்டு பறங்கி பலம்.வ, —றப்பாகம் பலம்.வ, இது கசாயம்.

திப்பிலி, லவுங்கம், சீரகம் இது துணியில் முடிந்து போட்டு நாழி தண்ணீர் வார்த்து உள்ளுக்கு தண்ணீராக காய்ச்சி அதிலே முடிஞ்சு போட்ட மருந்தை எடுத்து சுராங்கி மாத்திரை வைத்து அரைச்சுக் கொடுக்கவும். ஏழு நேரங் கொடுக்க பத்தியம் வெந்நீர் தண்ணீயுஞ் சோறும் நாற்த்தங்காயும்.

மேக சுர லட்சணம் :-

வெளுமை விழும். ரெத்தம் விழும். தாக மெடுக்கும். இருமல் வரும். காலும் கையும் அசதி கொடுக்கும். நித்திரை வராது. வாய்க்கு ஆரோக்கிய மில்லே. மூரை தண்டு உளைக்கும். பல பலவிதங் காணும்.

இதுக்கு மருந்து :-

சீக்கு பலம்.க, தாளிச பத்திரி பலம்.வ, கோரோசனி ஓமம் பலம். சாதிக்காய் பலம்.வ, சாபத்திரி பலம்.வ, லவுங்கம் பலம்.வ, மூலம் பலம்.க, ஓமம் பலம்.உ, மிளகு பலம்.வ, தீபகாஉச்சி பழம் பலம்.க, கச்சூர பழம் பலம்.க, அதிவிடையம் பலம்.வ, அதிமதுரம் பலம். , பற்படாகம் பலம். , கோட்டம், பலம். சீரகம் பலம். , கொத்தமல்லி பலம். , அரிதாரம் பலம். கொப்பரை பலம்.உ, சலவை மிளகு பலம்.வ, தேன் பலம். , சர்க்கலை பலம் பசுவின் நெய் பலம்.உ, தானிக்காய் பலம்.க, லவுங்கப் பட்டை பலம். சூரணம் பண்ணி தின்னவும். இதுக்கு பத்தியம் புளி விடவும்.

வயிற்றில் அழுவைக்கு மருந்து :-

முத்தத் தேங்காய் குடுமி பிச்சு ஒரு கண்ணே குத்தி அதுக்குள்ளே கல்லதாய் உப்பு அரை அடைத்த் தேங்காயில் அடைச்சு ரொம்பின பிறகு குப்பையைத் தோண்டி ஆட்டு எருவு போட்டு காய் வைத்து அதின் மேலே எருவைப் போட்டு மேலே குப்பை த் தள்ளி ஏழா நாளைக்கு தூப தீபங் காட்டி எடுத்து அந்தக் காயை உடைச்சால் ஒரு வேறு மருந்து வேறு ஆகும். அதை எடுத்து பல்லாகையில் போட்டு ஒரு நேரத்துக்கு கால் பலம் பிரமாணம் தின்னவும். இதுக்கு பத்தியம். குணமாம்.

சீதள வேதிக்கு விரோசனம் :-

ஆமணக்கு முத்து.உய, நேர்வாள முத்து.உய, பசுவின் பாலில் புடம் போட்டு நிழலில் உலர்த்திக் கூட்டு வர்க்கம். கடுகுரோகணி விராகனெடை.க, வெள்ளைப் பூண்டு பலம்.உ, வெங்காரம் விராகனெடை.க, கடுக்காய்.க, பச்சை நேர்வாளம் பலம்.வ ஆமணக்கு முத்து இரண்டு இத்தனையுங் கூட்டி பூசனிக்காய் சாறு வார்த்தரைத்து கடலே மாதிரி உருண்டை பண்ணி கொடுக்கிற போது வெல்லத்தில் இரண்டு உருண்டையை நசுக்கிக் கொடுக்கவும். விரோசனமாம். இதுக்கு மாத்து : சுடுகஞ்சியும், சோறும் குடிக்கவும் நிற்கும்.

குன்மம் குட்டுக்கு மருந்து :-

குப்பை மேனியிலேயும், திப்பிலியும், வெள்ளிள்ளியும் ஒரு உப்புக் கட்டி ஒன்றுங் கூட்டி அரைத்து மூன்று உருண்டை பண்ணி உள்ளங் கையில் நெய் தடவி உருண்டையை பிறட்டி முழுங்கவும். இப்படிமூன்று நாள் கொள்ளவும் தீரும்.

உள் மூலத்துக்கு :-

பேய்ப் பீர்க்கம் விரை நாழி, கண்டு மணி நாழி, வெண்காரங் கழஞ்சி இவை பேய்ப்பீர்க் கிலே சாத்தில் அரைத்து சாரித்து சூரிய புடம் வைத்தால் தயிலமாம். இந்த தயிலம் எருக்கம் பாலும் குழைத்து தடவ சுக்கு மூலம் போம்.

பிற மூலத்துக்கு மருந்து :-

சொரியான் தவக்கை உலர்த்தி சுட்டு உள்ளுக்கு தேனில் குழப்பி சுத்தந் தடவ

அத்து விழும். மூன்று நாளிடவும். பிறமூலம் போம்.

உள் காச்சலுக்கு:-

கொடிவேலி வேர்சுண்டைக்காய் பிரமாணம் வெண்ணை சுண்டைக்காய் பிரமாணம், கருப்புங் கூட்டி இது நீரிலரைத்து கரைத்து குடிக்க உள் காச்சல்---- தீரும்.

வேளையிலே சத்துங் கருவேப்பிலை சத்து சீரகஞ் சுக்கு மிடிச்சு போட்டு வெந்நீர் தண்ணீர் வார்த்து உழக்காய் காய்ச்சி முடிச் செயரைத்துக் கொடுக்க வயிறு கழிக்கல் நிற்கும்.

ரத்த சந்தனக் கட்டை சேர்.க, சங்கங் குப்பி சூரணம் சேர்.க, நல்ல சீரகம் சேர்.க, சந்திர காந்தி சேர்.க, இது நாலும் இடித்து சூரணம் பண்ணி வஸ்திர காயம் பண்ணிக் கொண்டு பசுவின் நெய் சேர்.க, மூன்று விரல் கொண்டு சூரணத்தை எடுத்து உள்ளங் கையில் வைத்துக் கொண்டு அந்த நெய்யில் வைத்து உள்ளுக்கு சாப்பிடவும். இதுக்கு பத்தியம் அனல் பண்டம், செதுப்புப் பண்டம் ஆகாது. குளிர்த்தியாக இருக்கப் பட்ட தானியம் சாப்பிடலாம். இப்படி இது ஒரு மண்டலம் சாப்பிட்டால் வச்சீர சரீரம் புத்திரன் உண்டாம். மேக வெட்டை, வாய்வு எல்லாம் விட்டு ஓடும். இது கை கண்டது.

பலவித காமாலை குணம்:-

மாங்கிஷத்தின் பேரில் வெகு மிச்சை பல பலவிதனம் ஆகும். கை கால் அசந்து போகும். வல சுத்தி ஆகாது. கண் பசறுங் கட்டும். நின்ற விடத்திலிருக்க வொட்டாது. இது ரத்த காமாலை யென்றறியவும்.

மருந்து:-

ஒச்சிய மில்லாத கழுத்தாட்டுக் கோமியம் ஒரு வேளை ஒன்றுக்கு சேர்.க, அதிலே சிகப்பு நெருஞ்சி ஒரு குத்து இடித்து அந்தக் கோமியத்தில் போட்டு ராத்திரி காலம் ஊற வைத்து காலமே எழுந்திருந்து பிசைந்து எரிந்து போட்டு உள்ளுக்குக் கொள்ளவும். இதுக்கு பத்தியம் புதுச் சட்டி புகு அகப்பை புழுங்கல் அரிசி இது ஆகும். மற்றவைகள் தொடக்கூடாது.

ஊற காமாலைக்கு மருந்து:-

சிறு தும்மட்டி வேர் பிடுங்கி வந்து கருணை கருணையாக தரித்து நாசித் ஞாயிற்றுக் கிழமை நாள் சற சற மாலையாக கட்டி கோழி சேவல் ரத்தங் காட்டி பிள்ளையார் வைத்து தூப தீபங் கொடுத்து சாயங்காலம் வேளையிலே கழுத்துங் கட்டி கைக்குங் கட்டி அந்த மூலிகை உலர வைத்து வத்திப் போம். இது அறியவும்.

நாலா முறைக் காச்சலுக்கு:-

சனி அன்றைக்குக் காப்புக் கட்டி ஞாயிறு அன்றைக்கு விடத் தேரி வடக்கே போற வேர் கோழிப் பொலி கொடுத்து கன்னி கழியாத பெண் ---(மேல் முடிவு இல்லை)

வெட்டைக்கு மருந்து:-

எட்டிப் பழம்,--- கட்டி பட்டை சாறு நாழி, அறுகங் கட்டை சாறு நாழி சிறு நாகப் பட்டை சாறு நாழி, வேப்பம் பட்டை சாறு நாழி, ஆவரை நெருஞ்சிச் சாறு நாழி, முசுமுசுக்கைச் சாறு நாழி, வேலம் பட்டை சாறு நாழி, நல்லெண்ணை நாழி இது வெல்லாம் ஏகமாய் தயிலம் பண்ணி வெட்டை சரிகறதுக்கு பதினைந்து நாளைக்கு

தலைக்கிட்டு முருக நாயு வகை வெட்டை எல்லாம் விட்டுப் போம்.

சகல சுரத்துக்கு கசாயம்:-

நிலவேம்ப, கொடிவேலி, சிவனார் வேம்பு, மூக்காவளை, சீந்தல் தண்டு, விரகிந்தம், சுக்கு இது சரிபாகம் போட்டு இரண்டு படி தண்ணீர் வார்த்து கால நிற்க காய்ச்சி கொடுக்கத் தீரும்.

கோரைக் கிழங்கு பற்படாகம், சித்தாமணக்கு வேர், சீந்த் தண்டு இது கசாயம் பண்ணிக் கொடுக்கவும் சுர.ந தீரும். இதுக்கு பத்தியம் மோருஞ் சோறும் உண்ணவும்

சுரம் குளிகை பண்ண விபரம்:-

பூந்த சுரம் தீரும். இது போசன் பூசனங் குளிகை. சாதிலிங்கம், நேர்வாளம், கடுகுரோகணி இது மூன்றும் ஒரு சரியாக வாங்கிக் கொண்டு கஞ்சாங் கோரை சாத்தில் அரைத்து பயறு பிரமாணம் குளிகை பண்ணிக் கொண்டு வைத்துக் கொள்ளவும். சகல சுரத்துக்கும் ஆகும். இதுக்கு பத்தியம் தயிருஞ் சோறும் சாப்பிடவும். சகல சுரமுந் தீரும். ஆரோக்கிய நமஸ்து.

* இந்தச் சுவடி பலவிடங்களில் பல ஏடுகள் சிதைந்தும் உள் விஷயங்கள் சரிவர யில்லாமலும் முடிவு இல்லாமலும் பல பிழைகள் நிறைந்தும், பல வகையிலும் சீர் கேடாக இருப்பதால் ஒருவாறு சீர் படுத்தியும் சீர் படுத்த முடியாத வற்றை உள்ளவாறே எழுதியும் நிரப்பலாயிற்று.

many Prescriptions not useful

******

முற்றும்.

சு.ச.15.12.62.

Total typed Page 49
Completed Verification
on 30-4-63

Sundaranandu
30/4/63

532

352